ERODE

2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ. 3—0
6 மாத சந்தா ,,	— ,, 1–12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.
ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
ஒப்பந்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஐப்பசி 2உ (18—10—1931) | மலர் 25

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தக்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநு[illegible] தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4   12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கின் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினப்பள்ளி

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி, S. I.

குஷ்டநோய்க்கு அற்புத மருந்து.

உடம்பில் தோல் நிறம் மாறித் தோல் தடித்தல், மதமதப்பு, திமிர்தினவு, இரணம் முதலியன உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல் முதலிய குஷ்ட நோய்களுக்கு ஓர் சிறந்த சித்த மருந்து. இது தாம்பிரம், வங்கம் முதலிய களிம்புள்ள உலோகங்களின் செந்தூர பஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றுஞ் செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40-நாள் மருந்து ரூபாய் 12. 20-நாள் மருந்து ரூபாய் 7.

மதிப்புரை.

எனக்குக் கால் விரல்கள் ரணமாகியும் பாதத்தில் பெரியகுழிப்புண் உண்டாகி அழுகி நீர்வடிந்து கொண்டும் சுமார் இரண்டு வருஷமாகப் பலவகை இஞ்சக்ஷன்கள் செய்தும், வைத்தியங்கள் செய்தும் குணமாகாமல் மிகக் கஷ்டமடைந்தேன். சென்னை தங்கசாலைத் தெரு, தமிழ் வைத்திய சாலைத் தலைவரும் கார்ப்பொரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்களின் அருமையான மருந்தால் என் ரணங்கள் ஆறிக் குழிப்புண்களும் ஆறிப், பழைய நிலைமையை அடைந்தேன். என்னுடைய நோய் தீராதென்று என் உயிரையே வெறுத்துக்கொண்டிருந்தேன். பயங்கரமான என்னுடைய நோய் நீங்கி நலமடைந்தேன். என்போன்ற டலரும் போலி மருந்துகளால மோசம் போகாமல் பண்டிதர் அவர்களிடம் நோய் நீங்கிச்சுகமடையக் கோருகிறேன்.

எஸ். ராதா கிருஷ்ணன்,
1/75, திருப்பள்ளித் தெரு, சென்னை.

18—7—31

பொது ஜனங்களுக்கு எனது விண்ணப்பம்.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல் தடிப்பு, நிறம் மாற்றம், தினவுரணம் முதலியவைகளோடு கூடிய குஷ்டநோய்குச் சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச் சாப்பிட்டு கொடியநோய் அறவே நீங்கி வலிவும் அழகும் அடைந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இனியேனும் என்போன்ற நோயாளிகள் போலி மருந்துகளை அருந்தி மோசம் போகாமல் பண்டிட் ஆனந்தரின் அரிய மருந்துகளை உண்டு அறவே நோய்கள் நீங்கி தேகநலத்தோடும் பலத்தோடும் வாழ வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
பி. டி. சுந்தரம்,
61, படைவேட்டம்மன் கோவில் வீதி,
புரசவாக்கம், சென்னை.

18—7—31

தந்தி விலாசம்:—"மருத்துவன்."
டெலிபோன் நெ. 2584.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி1-க்கு 0—8—0
டஜன் 1-க்கு 6—0 - 0
$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு ,, 1—8—0
உள். ஷை டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ. 15—0—0
$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு
வெளிநாட்டுக்கு தபால்
செலவுடன் ரூ. 0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 0-11-6 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 13 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

குறைந்த விகிதத்திற்கு போட்டோபிடித்துக்கொடுக்கப்படும்.

A. பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கம்யூனிஸம்.

சோஷியலிஸம்.

சமதர்ம அறிக்கை.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

தொழில்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் பயனாய் மனிதர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியதான தேவைகள், சாமான்கள் முதலியவைகள் எல்லாம் மாறுதலையடைந்து அதனால் அனேக விஷயங்களில் வெளிநாட்டு சாமான்களையே வாங்கித்தீர வேண்டியதாகவும், இல்லாவிட்டால் மக்களுக்கு திருப்தி ஏற்பட முடியாமலும் செய்துவிட்டது. அந்தந்த நாடுகளில் மக்கள் ஏதோ ஒரு மூலையில் முடங்கிக்கிடந்து, உள்ளதைக் கொண்டே திருப்தியாக வாழ்ந்துவந்த நிலைமை மாறி, இப்போது ஒவ்வொரு திசையிலும் அவர்கள் போக்குவரத்து வைத்துக்கொள்ளவும், ஒவ்வொரு தேசத்தாரின் உதவியை எதிர்பார்ப்பதும் சாதாரண காரியமாகிவிட்டது.

தொழில் விர்த்தியால் சாமான்கள் விஷயத்தில் ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்கும் எப்படி சம்பந்தம் ஏற்பட்டதோ அதேமாதிரி அறிவு வளர்ச்சிக்கான விஷயங்களிலும் ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படலாயிற்று. ஒரு தேசத்தில் அறிவாளிகளால் இயற்றப்படும் நூல்கள் அந்த தேசத்தில் பிறந்தவர்களுக்கு மாத்திரமே என்றில்லாமல் அவை மற்றும் வெளிதேசத்தார் உட்பட சகலருக்கும் உரிமை உள்ள பொது சொத்துக்களாக மாறின.

தேசியம் என்பதின் பெயரால் ஏற்பட்டிருந்த ஆராய்ச்சியற்ற ஒரு-தலை பக்ஷமான அபிப்பிராயங்களுக்கும், குறுகிய எல்லையைக்கொண்ட எண்ணங்களுக்கும் இனி இடமில்லாமல் போனதோடு, அந்தந்த தேசங்களில் இயற்றப்பட்ட இலக்கியங்களும், நூல்களும் ஒருங்கே ஒன்றாகத் திரட்டப்பட்டு உலக நன்மைக்கென எல்லா பக்கங்களுக்கும் அளிக்கப்பட்டன. தொழில் முறைகள் வேகமாக அபிவிர்த்தி அடைவதாலும், போக்குவரத்து சாதனங்கள் விர்த்தியடைந்ததினாலும் உலகில் காட்டுமிராண்டி ஜனங்களைக்கூட அதாவது நாகரீகம் அடையாதவர்களும், பழைமைப்பிடிவாதமுடையவர்களுமான ஜனங்களைக் கூட முதலாளிகள் ஆதிக்கமானது நாகரீகமடையச் செய்துவிட்டது.

முதலாளித்தத்துவம், தொழில் முறை முன்னேற்றத்தின் பயனாய் இயந்திரங்களில் உற்பத்தி செய்யும் சாமான்களின் விலையானது மிகசரசமாக இருப்பதால், நாகரீகமடையாத ஜனங்கள்கூட அவைகளை வாங்குவதின் மூலம் வெளிநாட்டாரிடம் ஏற்படும் ஆவேஷம், அருவருப்பு ஆகியவெல்லாம் தானாக மறைந்து விடுகின்றன. மற்ற தேசத்தாரையும் தங்களுடன் போக்குவரத்து வைத்துக் கொள்வதன் மூலம் தங்களுடைய முறைகளையே கையாளும்படியாகவும், தாங்கள் எதை நாகரீகம் என்று கருதுகின்றார்களோ அதையே பின்பற்றும்படியாகவும்கூட முதலாளி வர்க்கத்தார் செய்துவிடுகின்றார்கள்.

அதாவது, மற்ற தேசத்தார்களையும் தங்களைப்போலவே முதலாளிக் கொள்கைகளை கையாளும்படிசெய்து விடுகிறார்கள் நாளடைவில் தங்களைப்போலவே உலகம் முழுவதையும் ஆக்கியும் விடுகின்றார்கள். இந்த முதலாளி கொள்கைகளானது கிராமாந்திரங்களையெல்லாம், பட்டணங்கள் அடக்கி யாளும்படி செய்து விடுகின்றன. வியாபாரப் பெருக்கத்தின் மூலம் விருத்தியடையும் பட்டணங்கள் நாளடைவில் ஜனத்தொகையில் பெருத்து, கிராமத்திய ஜனங்கள் பெருவாரியாய் தன்னை வந்தடையும்படி செய்துவிடுவதோடு கிராமங்களில் வாழ்ந்துவந்த சாதாரண பாமர முட்டாள ஜனங்களுக்குங்கூட சற்று அறிவு உணர்ச்சி ஏற்பட சந்தர்ப்பங்கள் கிடைத்தது.

கிராமங்கள், பட்டணங்களுக்கு அடங்கி இருக்கவேண்டி ஏற்பட்டது போலவே, உலகத்தில் நாகரீகமடையாத தேசத்தார் நாகரீகமடைந்த தேசத்தாருக்கு அடங்கி யிருக்க வேண்டியதாகின்றது. இக்கொள்கையை அனுசரித்துதேதான் இந்தியா, சீனா முதலிய கீழ்நாட்டார்கள் ஐரோப்பா முதலிய மேல்நாட்டாருக்கு அடங்கி இருக்க நேர்ந்தது.

சிதறிக்கிடக்கும் கிராம ஜனங்களையும், சொத்துக்களையும், தொழில் முறைகளையும் ஒன்றுபடுத்துவதே முதலாளித் தன்மையின் கொள்கையாகும். அன்றியும், அது பட்டணங்களின் மூலம் கிராம ஜனங்களை ஒன்றுசேர்த்து இயந்திரசாலைகளின்மூலம் தொழில் முறைகளை ஒன்றுபடுத்தி, செல்வங்களையெல்லாம் வெகு சிலரிடமே போய்ச் சேரும்படியாகச் செய்து விட்டது. இதன் மூலம் அரசாங்க முறைகளும் ஒன்று படுத்தப்பட்டன. பல இடங்களில் தனித்தனியாகவும், சுயேச்சையாகவும் அதிகாரம் செலுத்திவந்த இராஜியங்களை எல்லாம் ஒரே தேசீய ஆக்ஷிக்கும் ஒரே சட்டத்திற்கும், ஒரே விதமான வரி விதிப்புக்கும், ஒரே எல்லைக்குள்ளும், ஒரே தீர்வைக்கும் உட்பட்டதாகச் செய்து விட்டது. முதலாளி தத்துவத்திற்கு தன்னால் சுலபத்தில் செய்து முடிக்கக்கூடிய சிருஷ்டி சக்திகள் ஏற்கனவே இருந்து வந்ததைவிட ஒரு நூறு வருஷத்திற்குள் எவ்வளவோ அபரிமிதமான பெருக்கம் ஏற்பட்டுவிட்டது.

இயற்கை சக்திகளை அடக்கி ஆளவும், அற்புதமான இயந்திர சக்திகளை செய்யவும், இரசாயனத்தை தொழில் முறையில் மூலப்பொருள்களை உபயோகிக்கவும், நீராவி சக்தியின் மூலம் கப்பல்களையும் இரயில்களையும் ஓட்டவும், மின்சாரசக்தியின்மூலம் தந்திகள் பேசவும், பெரியபெரிய கண்டங்களில் உள்ள காடுகளை யெல்லாம் அழித்து சாகுபடிக்கு லாயக்குள்ளதாக ஆக்கவும், நதிகளுக்கு அணைகள் போட்டு தடுத்து வாய்க்கால்கள் வெட்டி, நீர்ப்பாசன ஏற்பாடுகளை செய்யவும், இவைகளின்மூலம் ஏராளமான ஜனங்களுக்கு வேலைகள் கொடுக்கவும் முடிந்ததாகிய இவ்வற்புதங்களை யெல்லாம் பற்றி பழைய காலத்தில் இருந்தவர்கள் கனவு கூடக்கண்டிருக்கமாட்டார்கள்.

முதலாளி தத்துவம் ஆரம்ப காலத்தில் எங்கும் ஜமீன்தார்கள் ஆக்ஷிக்கு யேற்றதாகவே தொழில் முறைகளும், சாமான்கள் உற்பத்தி விற்பனை முறைகளும் அவர்களுக்குசௌகரியமாகவே ஏற்பட்டிருந்தன. ஆனால் முதலாளி கொள்கை பரவ ஆரம்பித்த பிறகு ஜமீன்தார் ஆக்ஷியில் ஏற்பட்டிருந்த உற்பத்தி விற்பனை முறைகள் எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உள் அடங்கியதாய் இருந்துகொண்டு வியாபாரப் பெருக்குக்குப்பொருத்த இடையூறாயும் இருந்ததால் அவற்றை அடியோடு தகர்த் தெறிய வேண்டியதாயிற்று. அதற்குப்பிறகு ஏற்பட்ட முறைகளில் தான் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு தொழில் முறைகளையும், சாமான் உற்பத்தியையும் விர்த்தி பண்ண, சுதந்திரம் ஏற்பட்டது. அந்த சுதந்திரத்திற்கு தகுந்த படியாகவே இராஜீய சமூக அமைப்புகளிலும் பல திருத்தங்கள் ஏற்பட்டன.

இவைகள் எல்லாம் நடந்து வந்தது ஒரு புறமிருக்க, இதே மாதிரியான மற்றொரு தீவிரமான மாறுதல் இன்றைய தினமும் நமது கண்களின் முன் நடந்து வருகின்றது.

தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் முதலாளிகள் சமூகம் தாங்கள் அமைத்துக்கொண்டிருக்கும்தொழில் முறைகள் மூலமும், சொத்து சுதந்திரங்களின் மூலமும் ஏராளமான சாமான்களை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு "பேய்"த்தனம் அதாவது கட்டுக்கடங்காததான உற்பத்தி சக்தி கிளம்பி விட்டதால், அதை அடக்கி ஆள முடியாமல் அந்த முதலாளிகளே திண்டாட வேண்டியதாய் விட்டது.

சென்ற சில வருஷங்களின் வியாபார முற்போக்கின் சரித்திரமானது சாமான்களை உற்பத்தி செய்ய அனுஷ்டிக்கப்படும் நவீன தொழில் முறைகளுக்கும் (இயந்திர முறைகளுக்கும்) அவைகளை உற்பத்தி செய்வதில் ஆதிக்கம் பெற்று இருக்கும் முதலாளிகளின் நன்மைக்கும் ஏற்பட்ட போராட்டமேயாகும். இதற்கு உதாரணமாக, சிற்சில வருஷங்களுக்கு ஒரு தடவையாக ஏற்படும் வியாபார நெருக்கடியை எடுத்துக் கொள்ளலாம். இம்மாதிரியான நெருக்கடிகளின் மூலம் முதலாளி வகுப்புக்குத்தான் அடிக்கடி கஷ்டங்கள் ஏற்படுகின்றன இந்த நெருக்கடி காலங்களில் ஏராளமான சாமான்களும், உற்பத்தி சாதனங்களும் அழிக்கப்படுகின்றன. இம்மாதிரி நெருக்கடி காலங்களில், பழைய காலங்களில் எதிர்பார்த்திராத மாதிரியில் சாமான்கள் அளவுக்கு மீறி உற்பத்தி செய்யப் பட்டிருப்பதாக காணப்படுகின்றன.

இதன் மூலம் திடீரென்று சமூகத்தில் காட்டுமிராண்டித்தனமான ஒரு உணர்ச்சி தோன்றுகின்றது. ஒரு பெரிய பஞ்சமோ, அல்லது ஒரு மகா யுத்தமோ ஏற்பட்டு வாழ்க்கைக்கு உரிய எல்லா சாதனங்களையும் அழிக்கப் பட்டு விட்டாற் போன்றதான ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. தொழிலும்,வியாபாரமும் திடீரென்று நின்று விடுகின்றன.

இதற்குக்காரணம் என்னவென்று பார்ப்போம். அளவுக்கு மிஞ்சிய நாகரீகமும், அளவுக்குமிஞ்சிய வாழ்க்கை சாதனங்களும், அளவுக்குமிஞ்சிய தொழில் அபிவிருத்திகளும், அளவுக்கு மிஞ்சியவியாபாரப் பெருக்கமும் இவற்றிற்குகாரணம் என்று தெரிகின்றது. மனித சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் உற்பத்தி சாதனங்கள் 'முதலாளிகளின் செல்வ அபிவிருத்திக்கு அனுகூலமானதாய் இல்லை.'' ஆனால் முதலாளிகளுடைய கட்டுக்கு அடங்காத அளவு அவைகளுடைய சக்தி வளர்த்து முதலாளிகளுடைய சமூக வீழ்ச்சிக்கே காரணமாக ஆகிவிடுகின்றன. முதலாளி சமூக அமைப்பானது முதலாளித்துவத்தின் மூலம் ஏற்படும் செல்வத்தை அடக்கிக் கொள்ளும் சக்தி பெற்றதாய் இல்லை.

இந்த நெருக்கடியில் இருந்து முதலாளிகள் எப்படி தப்பித்துக் கொள்ளுகின்றார்கள் என்றால், ஒரு பக்கத்தில் உற்பத்தி சாதனங்களை அழிப்பதன்மூலமும், மற்றொரு பக்கத்தில் சாமான்களை விற்பனை செய்வதற்கென புதிய வியாபார ஸ்தலங்களைக் கண்டு பிடிக்கவும், ஏற்கனவே உள்ள இடங்களில் விற்பனையை அதிகப் படுத்துவதன் மூலமுமேதான் சமாளித்துக்கொள்ளுகின்றார்கள்.இப்படியாக விற்பனையை அதிகப் படுத்து

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க,

பெண்கள் நிலைமை.

ஆண்களைவிட பெண்கள் இழிந்தவர்களா?

(செல்வி. சிவகாமி சிதம்பரனார்.)

பிறவியிலேயே பெண்பிறவி பாவமான பிறவி என்று கருதப்படும் நம்நாட்டில் பெண்களுக்கு என்ன சுதந்திரமும், சுகமும் இருக்குமென்பதை யோசித்துப்பாருங்கள்.

இந்தியாவில் கர்ப்பவதியாயிருக்கும் தாய்மார்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் 'பெண்குழந்தை பிறக்கக் கூடாது, ஆண்குழந்தை பிறக்கவேண்டு'மென்று கவலைப்பட்டு அதற்காக அழிக்கும் பொருளுக்கும், அனுஷ்டிக்கும் விரதங்களுக்கும் ஓர் அளவே இல்லை. ஏனெனில், பிறந்ததுமே பெண்குழந்தையை 'பொட்டை' என்றும் எதற்குப் பிரயோசனம் என்றும் கூறி இழிவுபடுத்துவதே காரணம். பிறக்கும்போதே அவர்களுக்குக் கல்வி அறிவு இல்லையாம். ஆதலால் பெண்குழந்தைகளைப் பிறக்கும்போதே 'பொட்டை' என்று நம் நாட்டுப்புத்திசாலிகளால் கூறப்படுகிறது. ஓ! புத்திசாலிகளே! ஆண்குழந்தையாய் இருந்தால் மாத்திரம் அது பிறக்கும்போதே சகல கல்வி அறிவோடும் கூடி, கண் உள்ளதாய் பிறக்கின்றதா? இல்லையே! அல்லது தாய்வயிற்றில் இருக்கும் பத்து மாதங்களில் ஏதேனும் ஆண்குழந்தைக்கும், பெண்குழந்தைக்கும் வித்தியாசங்கள் உண்டா? பிரசவ வேதனையில் ஏதாவது வித்தியாசமுண்டா? இன்னும் வளர்ச்சியிலோ, செய்கைகளிலோ, அறிவிலோ இரு குழந்தைகளுக்கும் ஏதேனுமொரு உயர்வு தாழ்வு இயற்கையாகவே உண்டாகி இருக்கின்றனவா? என்பதை உற்று நோக்கினால் விளங்காமல் போகாது.

இந்தியாவில் உள்ள இக்கொடிய வழக்கத்தினால், இரண்டொரு பெண் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களைக்கூட அநேக குடும்பங்களில் ஆண் குழந்தை இல்லை என்ற காரணத்தால் நீக்கி, வேறு மணம் புரியும் ஓர் கொடிய வழக்கம் நம் நாட்டில் தற்காலம் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. புத்திரனில்லாவிட்டால் உயிர் போன பின் 'புத்'என்னும் நரகம் கிடைக்குமென்று தன்னலங்கருதும் ஒரு சில கூட்டத்தாரால் எழுதிவைத்த--ஆராய்வோர்க்கு--அர்த்தமற்ற சாஸ்திரக் குப்பைகள் அல்லவா? இவ்வாறு பெண்களை இழிவாய் நினைப்பதற்குக் காரணம், பெண்குழந்தைகள் உங்கள் கண்களுக்கு மனிதப்பிறவியாய்த் தோன்றவில்லையா? பிறந்தது முதல் இறக்கும்வரையிலும் பெண்மக்கள் நம் நாட்டில் அடையும் துயரமும், இழிவும் எவ்வளவு! பெண்கள் என்றால் ஆணவம் படைத்த ஆண்மக்கள் அடிமை என்றும், ஒரு பொருள் என்றும் இழிவாய் கருதும் சண்டாளக் கருத்து இந்தியாவை விட்டு என்று ஒழியுமோ அன்றே இந்நாடு சுயராஜ்ய, சுதந்திர, சமத்துவநாடாய் விளங்குமே அல்லாது, குட்டிக்கரணம் போட்டு சுயராஜ்யம் வாங்கினாலும் கூட பெண்மக்கள் சமத்துவம் இல்லாதவரையில் இந்தியநாடு சுயராஜ்ய நாடாய் விளங்குவது குதிரைக்கொம்பாகத்தான் முடியும் என்பதை அறிவுறுத்துகின்றோம்.

பெண்கள் ஆண்களைவிட எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. அறிவுபலத்திலோ, மனோபலத்திலோ ஆண்களைவிடப் பெண்கள் இளைத்தவர்களல்ல. ஆனால், தற்காலத்தில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் உடல் பலத்தில் கொஞ்சம் வேற்றுமை காணப்படுவதற்குக் காரணம் குழந்தைப் பருவமுதலே ஆணை ஒரு விதமும், பெண்ணை ஒரு விதமுமான பழக்க வழக்கங்களில் வளர்க்கப் படுவதே யாகும். 3 வயது வரையில் ஆண்குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சமவிதமாய் வளர்க்கப் படுகிறார்கள். 4 வயதாகி விட்டால் நம் நாட்டில் பெண் குழந்தைகள் வளர்க்கப்படும் விதம் வருத்தத்திற்குரியதே. 4 வயதானதும் இவர்களுக்கு சின்னகுடம் வாங்கிக்கொடுத்துத் தண்ணீர் எடுக்கச் சொல்லுகிறார்கள் அதற்கிளைய சிறு குழந்தைகள் இருந்தால் அவைகளை அழாமல் வைத்துக் கொள்ளவும் பிரயோசனப் படுத்திக் கொள்ளுகிறார்கள். 5, 6 வயதில் ஏதோ ஒரு சிலரே பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். அதுவும் 10 அல்லது 12 வயது வரையில் தான். அதற்குள் 8, 9 வயதிலேயே அவர்கள் தாராளமாய் வெளியில் செல்லுவது கூடாது. 'என்னடி! பெண்ணாய்ப் பிறந்த உனக்கு வெளியில் விளையாட்டு? வெட்கமில்லையா?'' என்பார்கள். பள்ளிக்கூடம் போய் வீட்டுக்கு வந்தால் ஆர்மோனியம் போன்ற வாத்தியங்கள் கற்க வேண்டும்; இல்லையேல் வீட்டிலுள்ள பாட்டி முதலியவர்களால் கற்றுக் கொடுக்கப்படும் கல்யாணப் பாட்டுகள் கற்க வேண்டும்; இவர்களுக்கென விட்டு வைக்கப் பட்டிருக்கும் வீட்டு வேலைகள் சில செய்ய வேண்டும், கோலம் போடக் கற்றுக் கொள்ள வேண்டும், அழும் சிறு பிள்ளைகளை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இவைகளுக்கிடையில் இவர்களின் பள்ளிப் படிப்பும், தேகபலமும் எவ்வாறிருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். ருதுவாகி விட்டால் நம் நாட்டு வழக்கம் வெளியில் போகவே கூடாது. 10 வயதில் ஆனாலுங்கூட அதுமுதல் இப் பெண்மணிகள் அடுப்படியிலும், இருட்டறையிலும் அடிமையாய்க் கிடந்தழிய வேண்டியதே பெண்களுக்கு இயற்கையாய் இருக்கும் சிறு பலமும் அடியோடு அழிய வேண்டியதே. அல்லது எப்படி இவர்களுக்குத் தேகபலம் இருக்க முடியும்? அதே வயதுடைய ஓர் ஆண் பிள்ளையைக் கவனித்தால் அவன் எப்படி வளர்க்கப்படுகிறான் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல.

பெண்கள் ருதுவாகிற வரையில் தங்களுக்கு பெண் குழந்தை இருப்பதாகவே நமது நாட்டில் சில தந்தைமார்களுக்கு கவனம் இருக்கிறதில்லை. ஆனால் ருதுவானபின் 10 வயதானாலும் சரி இவர்களின் விவாக விஷயத்திலேயே கவனம் செலுத்திக் கவலைப்படுகிறார்கள். தன் தலையில் ஓர் பெரும் பாரம் இருப்பதாகக் கருதுகிறார்கள். இராப்பகலாய் இதே கவலையாய் இருந்து இரண்டொரு நகைகளைச் செய்து போட்டு, தங்கள் இஷ்டத்திற்கு யாராவதொருவருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். அதோடு நம் நாட்டுத் தந்தைமார்கள் கவலை நீங்கி விடுகிறதாம்! தங்களுக்கு ஆண் குழந்தை இல்லாவிட்டாலும் தங்கள் சொத்தில் பெண் பிள்ளைகளுக்குக் கொஞ்சமும் உரிமை கிடையாது. யாராவதொரு ஆண் குழந்தையை ஸ்வீகாரம் எடுத்து வளர்ப்பார்கள். இப்படிப் பட்ட மூடத் தந்தைமார்கள் உள்ள வரையில் நம் நாட்டுச் சகோதரிகள் முற்போக்கடைவது எவ்விதத்தில்?

நமது மாபெருந் தலைவர் உயர்திருவாளர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் நம் நாட்டின் 'பெண்மக்கள் விடுதலையின் பொருட்டும், மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கும் பொருட்டும் தோற்றுவித்த சுயமரியாதை' யென்னும் இயக்கமான சுடரொளிச் சூரியன் எங்கும் தன் பரிசுத்த ஒளியைப் பரப்பிவரும் தற்காலத்திலுங்கூட அநேக சகோதரிகள் (தாய்மார்கள் அல்ல) கொஞ்சமும் கல்வி அறிவு இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் சுயமரியாதை என்றால் என்ன? அது எப்படிப்பட்ட உருவம்? சுயமரியாதைக்காரர்களைப்பார்த்தால் கடிப்பார்களோ? அடிப்பார்களோ? என்று சிலரும், அவர்களுக்கு ஜாதி இல்லை. சாத்திரமில்லை, நாள் இல்லை, நக்ஷத்திரமில்லை, சாமி இல்லை, சடங்கில்லை, அவர்களுடன் பேசினால் அப்பழக்கம் நமக்கும் வந்துவிடுமோ என்னவோ என்று சிலரும்பேசி அஞ்சுகின்றார்கள். மற்றும் சில குடும்பங்களில் ஆண்கள் மூடப்பழக்கவழக்கங்களையொழித்து சுத்த சுயமரியாதை வீரர்களாய் விளங்க, அப்பெண்கள் வீட்டிற்குள் தந்துணைவர்க்குத்தெரிந்தோ தெரியாமலோ கடுமையான விரதங்கள் அனுஷ்டிக்கும் ஆடி பதினெட்டாம்பேர், கிருஷ்ணன் பிறந்தது, பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதிபூஜை தீபாவளி, பெரிய கார்த்திகை தீபம், ஏகாதசி கண்விழிப்பு, பொங்கல், இன்னும் காத்தாயி, காளி, காட்டேரி, முனி, வீரன், கருப்பன், பாம்பு, வீட்டில் செத்தவர்களுக்கு, குலதெய்வத்திற்கு இவைபோன்ற படைப்புகள் ஒன்றும் தவறாமல் செய்துவருகிறார்கள். இவைகளினால் என்ன பிரயோசனம் என்பதே முதலில் இவர்களுக்கு விளங்குவதே இல்லை. ஏதோ முன்னோர் செய்தது என்று சொல்லத்தான் தெரியும்.

தற்காலம் கல்வி அறிவுள்ள பெண்களின் கல்விகூட பஞ்சாங்கம் பார்ப்பதற்கும், மேற்கண்ட படைப்பு, விரதங்களைப்புதிது புதிதாய் அதிகமான செலவில் செய்வதற்கும் தான் உதவுகிறது. ஏனெனில், இந்திய சகோதரிகள் 12 வயதிலேயே சிறைபடுத்தப்பட்டு உலக விஷயங்கள் ஒன்றும் அறியாமலும், அறிந்து கொள்ள முடியாதவர்களுமாய் இருப்பதே காரணம். இப்படிப்பட்ட பெண்கள் பத்திரிகைகள் படிப்பதே குற்றமெனக்கருதுகிறார்கள்.

வைதீக குடுக்கைகளே! பெண்ணுலகைப் பாழ்படுத்துவதற்கெனவே கல்வி கற்பதற்குப் பெண்களுக்கு ஆற்றல் இல்லை என்றும், பெண்களுக்கும் கல்விக்கும் பொருத்தமில்லை என்றும், பெண்கல்வி பிரயோசனமற்றது என்றும் எழுதி வைத்தீர்கள். இதைக்குறித்து 'பேதமை என்பது மாதர்க்கணிகலன்' என்றும் எழுதி வைத்தீர்கள். ஆனால் தற்காலத்திற்கு 'அறியாமை என்பது ஆண்களுக்கு அணிகலன்' என்றால் தான் பொருந்தும். ஏனெனில், உங்களின் ஆராய்ச்சிக்கு மாறாக தற்காலம் இந்தியாவில் எத்தனை பி. ஏ., பட்டம் பெற்ற பெண்களும், டாக்டர்களும், ஆசிரியைகளும பொது மேடைமீது நின்று தீரமாய் உங்கள் ஆபாசச்செயல்களை எல்லாம் எடுத்துக்கூறும் திருமதி எஸ். நீலவதி அவர்களைப்போன்ற வீரப்பெண்மணிகள் அநேகர் தோன்றியுள்ளார்களே. இவர்களுக்கு ஆராய்ச்சியறிவு இல்லையா? இவர்களின் கல்வி பிரயோசனபடவில்லையா? என்பதுதான் எனது கேள்வி. ஒருக்கால் இவர்களை எல்லாம் ஆண்களெனக்கூறுவீர்களோ! ஓ தன்னலங்கருதும் 'தயாள குண சீலர்களே! ஏன் உங்களுக்குப் பெண் மக்களின் மீது இவ்வளவு அநியாய ஆத்திரம்! பெண்கள் நலத்திற்காக கொண்டுவரப்பட்ட ஒரு சாரதா சட்டத்திற்கு வைதீகக் கூட்டங்களாகிய நீங்கள் அடித்துக் கொள்ளும் அடிதான் என்னே! இப்படிப்பட்ட நீங்கள் ஆரம்பத்திலேயே பெண்களே உற்பத்தியாகாமல் செய்திருக்கலாம் அல்லவா? இவ்

[தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க]

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு, "ஜீன்மெஸ்லியரின்" மரணஸாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

கட்டுரை 7,

காப்பி ரைட்.

(மாலை 7, மலர் 12. பக்கம் 5.ன் தொடர்ச்சி.)

28. கடவுள் என்பது கட்டுக்கதை.

மதக்காரர்களெல்லாரும் இந்தவிதமான சங்கடங்களிலிருந்து சுலபமாகத் தப்பிப்பதற்காக, கடவுள் என்ன என்பதைத்தெரிந்துகொள்ள வேண்டியதே அவசியமில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். நாம் தெரிந்துகொள்ளாமலே வணங்க வேண்டுமென்கிறார்கள். அவருடைய குணாதிசயங்களைப்பற்றி கவனிப்பது குருட்புத்தியென்றும், அவைகளைப்பற்றி கவனிப்பதற்கு நமக்கு எவ்வித அதிகாரமுமில்லையென்றும் சொல்லுகிறார்கள். அப்படியே அவரைத் தெரிந்து கொள்ளாமலே வணங்கவேண்டுமென்று வைத்துக் கொண்டாலும், அவர் இருப்பதை பற்றியாவது நாம் நிச்சயமாய்த்தெரிந்து கொள்ளவேண்டாமா? மேலும், அவரைப்பற்றி சொல்லப்படும் முரண்பாடான குணங்களெல்லாம் அவரிடம் பொருந்தியிருக்க முடியுமாவென்பதை ஆராய்ச்சி செய்வதற்கு முன் அவர் இருப்பதைப்பற்றி எப்படி உறுதிகூறமுடியும்? ஆகவே உண்மையைக் கூறவேண்டுமானால், கடவுளை வணங்குவதென்பது தன் மூளையின் கற்பனையை வணங்குவதேயாகும். அல்லது பூஜியத்தை வணங்குவதாகும்.

29. ஆகவே நாஸ்தீகம்தான் சரி.

விஷயத்தை இன்னும் குழப்பத்தில் விடுவதற்காக ஆஸ்தீகர்களெல்லாம் தாங்கள் கடவுள் என்ன என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் இருப்பதே மேல் என்றமுடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அந்தக்கடவுள் எப்படி எப்படி 'இல்லை'யென்பதைமாத்திரம் நமக்குச்சொல்லுகிறார்கள். இவ்விதம் எதிர்மறைகளாலும் மனோகற்பிதங்களினாலும் சொல்லுகின்ற ஒன்றை உண்மையானதென்றும் பரிபூரணமானதென்றும்தாங்களாகவே நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் இவ்விஷயம் அவர்களுடைய மனக்கற்பனையேயொழிய வேறில்லை என்பது நன்கு விளங்கும். ஒரு ஆத்மாவிற்கு தேகம் என்பது கிடையாது. எல்லையற்றதென்பது எல்லையுடையதாயிருக்க முடியாது. பரிபூர்ணம் என்று சொல்லப்படுவது பரிபூர்ணக்குறைவாய் இருக்கமுடியாது. ஆகவே அவ்வளவு எண்ணிறந்த குறைகளையுடைய ஒன்றைப்பற்றியாவது, விஷய சூன்யமாய் இருக்கும் ஒன்றைப்பற்றியாவது யாராவது ஒரு உண்மையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கமுடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள் எது ஒன்றுஎண்ணத்தைக்கடந்து நிற்கிறதோ அது சூன்யம் அல்லது பூச்சியத்தை தவிர வேறெதாவது இருக்க முடியுமா? மிகப்பெரிய கடவுளின் குணாதிசயங்களானது கேவலம் மனிதனுடைய புத்திக்கு எட்டாதது என்று சொல்லப்படுமேயானால் கடவுள் மனிதனுக்கு சற்றும் பிரயோஜனமில்லையென்பது தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. கடவுளானவர் எல்லையற்றவர் என்று கூறப்படுமேயானால் அவருக்கும் அவருடைய ஜீவன்களுக்குமே எந்த சம்பந்தமும் இருக்க முடியாது என்பதை நாமே ஒப்புக்கொண்டு தீரவேண்டும். ஆகவே கடவுளை எல்லையற்றவர் என்று சொல்வதானது மனிதர்களுக்காக, அவரைக்கொன்றதாக, ஆகும்! அல்லது குறைந்தபக்ஷம் மனிதர்களுக்கு அவரால் எவ்வித பலனுமில்லை என்றாவது ஏற்படும்.

கடவுள் மனிதனை அறிவுடையவனாகப்படைத்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சகலமும் அறியக்கூடியவனாகப்படைக்கவில்லையே! அதாவது எல்லா விஷயங்களையும் உணரக்கூடியவனாகப்படைக்கவில்லையே! இதிலிருந்து ஏற்படுகிறது என்னவெனில், கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ளவேண்டிய அறிவோடு மனிதனைப்படைப்பதற்குக் கடவுளால் முடியவில்லையென்பதேயாகும். எனவே மனிதன் கடவுளை அறியும்படியாகச் செய்யும் சக்தியும் அவரிடம் இல்லை, அறியவேண்டுமென்ற விருப்பமும் இல்லை என்பது ருசுவாகிறது. மனிதனுடைய தத்துவமானது கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ள முடியாத இயற்கையோடு அமைந்திருக்கும்போது மனிதர்களிடத்தில் கோபித்துக்கொள்வதற்கு கடவுளுக்கு என்ன நியாயம் இருக்கிறது? இயற்கையாகவே மனிதன் கடவுள் தத்துவத்தை உணரமுடியாமலிருக்கும்போது அதற்காக நாஸ்தீகர்களைக்கடவுள் தண்டிப்பதாயிருந்தால் அவர்ரொம்ப அநீதிவானாகவும், சகிக்க முடியாத கொடுங்கோலனாகவுமே இருக்கவேண்டும்.

30. நாஸ்தீகம் குற்றமல்ல.

பெரும்பாலான பாமர மக்களுக்கு பயம் என்பதைவிட முடிவான தர்க்கங்கள் எதுவுமே கிடையாது. இந்தக்காரணத்தால மதக்காரர்களெல்லாரும் நம்மை ஜாக்கிரதையான வழியிலேயே போகவேண்டுமென்று சொல்கிறார்கள். நம்பாமலிருப்பதைவிடக் கொடுமையான காரியம் எதுவுமே இல்லையென்கிறார்கள். கடவுளிருப்பதைப்பற்றி சந்தேகப் படுகிறவர்களையெல்லாம் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் தண்டிப்பார் என்று சொல்கிறார்கள். அவர் அப்படிக் கொடூரமாய் நடத்துவது நியாயமென்கிறார்கள். நாஸ்தீகர்களைப் பழிக்குப்பழிவாங்கும் ஒருகோபமான அரசனுடைய செய்கையைப்பற்றிக் கேட்பதென்பது பைத்தியக்காரத்தனமேயாகும் என்று சொல்கிறார்கள். இக்கூற்றுகளைப்பொறுமையாய் ஆராய்ந்து பார்ப்போமேயானால் எது ருசுப்படுத்தப்படவேண்டுமோ அதே கற்பித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பது தெளிவாகும். கடவுளை நம்புவதுதான் சௌகரியம். சந்தேகித்தாலோ, அல்லது மறுத்தாலோ ஆபத்துண்டாகும் என்று நம்மிடம் சொல்வதற்கு முந்தி, முதலாவதாக அவ்விதம் சொல்பவர்கள் நாம் திருப்திபடும்வரையில் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை ருசுப்படுத்தவேண்டியது அவசியமாகும். பிறகு மனிதன் தன்னுடைய விசேஷ அறிவினால் கூட அறிந்து கொள்ள முடியாமலிருக்கும் ஒரு கடவுளைப் பற்றி சந்தேகப்படக்கூடிய ஒரு பைத்தியமான நிலைமையிலிருப்பதற்காக அவனை கடவுள் தண்டிப்பது நியாயந்தான் என்பதை ருசுப்படுத்தவேண்டும். அதாவது, சுருங்கக் கூறவேண்டுமானால் நியாயமேஉருவமாகஇருப்பதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், கடவுள் தத்துவமென்பதை அறியவே முடியாத அவசியத்திலிருக்கும் மனிதனைக் கொடுமையாகத் தண்டிப்பதின் நியாயத்தை ருசுப்படுத்த வேண்டும். ஆஹா! மதக்காரர்களின் தர்க்கம் எவ்வளவு வேடிக்கையாயிருக்கிறது பாருங்கள்! அவர்களே சில கட்டுக் கதைகளைக் கட்டிவிடுகிறார்கள்; பிறகு முன்னுக்குப் பின் முரணான விஷயங்களையும் அவைகளோடு பிணைத்து விடுகிறார்கள்; பிறகு தாங்களே கட்டியபுரளிகளை நம்பாமலிருக்கக் கூடாது என்று பயமுறுத்துகிறார்கள். இந்த முறைப்படி நடப்பதாயிருந்தால் எந்த அபத்தமான ஆபாசத்தையும் நம்பித்தான ஆகவேண்டும் என்பது ஏற்படும்.

உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் நாஸ்திகர்களேயாவார்கள்; ஏனெனில், கடவுளைப்பற்றி அவர்களுக்குஒன்றுமே தெரியாது. ஆகவே, இதற்காக அவர்களைக் கெட்டவர்களென்றோ, பாவிகளென்று சொல்ல முடியுமா? அவர்கள் எந்த வயதில் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள்? பகுத்தறிவு வந்தவுடன் என்று நீங்கள் சொல்வீர்கள். இப்பகுத்தறிவு காலம் எப்போது ஆரம்பிக்கிறது? அறிய முடியாதது என்று சொல்லப்படும கடவுள் தத்துவத்தை ஆராய்வதில் மிக மேதாவிகளான மதக்காரர்கள் கூட தவித்துக் கொண்டிருக்கும் போது, பெண்கள், தொழிலாளர்கள் முதலிய ஜனத்தொகையின் பெரும்பாலான பாமரமக்களென்போர் அதைப் பற்றி என்னதான் தெரிந்துகொள்ள முடியும்?

31. கடவுள் நம்பிக்கை தொட்டில் பழக்கமே.

கடவுளைப் பற்றி யாருக்கு ஒன்றுமே தெரியாதோ அவர்களுடையவார்த்தையைக் கேட்டுத்தான் பிறரும் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள். நமது வளர்ப்புத்தாய்கள்தான் நமது முதல் மதக்காரர்கள்; மனித ஓநாய், பிசாசு முதலியவைகளைப் பற்றிக் குழந்தைகளிடம் சொல்வதுபோ

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

நாகை முதலாவது சுயமரியாதை மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

3, 4—10—31 தேதிகளில் நாகையில் நடைபெற்ற நாகை தாலுகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:—

தீர்மானங்கள்.

1. விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டுத்தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கின்றது.

பிரேரேபித்தவர்:—

அ. பொன்னம்பலம்.

ஆமோதித்தவர்:—

நீடாமங்கலம் சோமசுந்தரம்.

2. பார்ப்பனர்களும், சுயநலக்காரர்களும், வயிற்றுப்பிழைப்புக்காரர்களும் காங்கிரஸ் மறியல் பகிஷ்காரம என்ற வார்த்தைகளால் பாமர மக்களை ஏமாற்றி, தேசத்தைப்பழைய அதாவது பார்ப்பன ஆதிக்க காலத்திற்கும், சோம்பேரிகள், பணக்காரர்கள் ஆதிக்கத்திற்கும் கொண்டு போகப்பார்க்கின்றபடியால் அவ்விதம் நடை பெறுதபடி பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும், ஆங்காங்குள்ள சுயமரியாதைக்காரர்கள் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்—

எஸ். பி கிருஷ்ணன்.

மறியலின் சூட்சியை நன்றாக விளக்கிகி மேற்படி தீர்மானத்தை ஆமோதித்தவர்:—

எஸ். வி லிங்கம்.

தலைவர் இத்தீர்மானத்தை ஆக்ஷேபிக்கிறவர்கள் ஆக்ஷேபிக்கலாம் என்று கூறினார். திரு. சிவஞானம் என்பவர் எதிர்த்துப்பேசமுன் வந்தார். அவர் மறியல் விஷயம் பற்றிப்பேசப்பட்டது தகாது என்றார். மேலும் சுயமரியாதைக்காரர்கள் சுதேசியத்தை ஆதரிப்பதால் மறியல் நல்லது என்றும் பேசினார்.

திரு. சிவஞானம் அவர்களைப்பின்பற்றி திரு. சூரிய நாராயண மூர்த்தி (நாகூர்) என்பவர் பேசினார்.

திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் இந்த ஆக்ஷேபணைகளுக்குத் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களை பதில் சொல்லவேண்டுமென்று சொல்ல, அதன் பேரில் ஈ. வெ. இராமசாமி அவர்கள் எழுந்து பேசியதின் சுருக்கமாவது:—

தீர்மானத்தின்மீது திரு. ஈ. வெ. இராமசாமி பேசியதின் சாரம்.

தலைவர் அவர்களே! நண்பர்களே!! இத்தீர்மானத்தை எதிர்த்துப்பேசியவர்களால் தான் இத்தீர்மானத்திற்கு பெருதத ஆதரவளிக்கப்பட்டதாக கருதுகின்றேன். திரு சிவஞானம் எதிர்த்ததால்தான் அத்தீர்மானத்தை உங்களுக்கு விளக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் ஒரு சமயம் ஒருவர் இருவராவது தாக்ஷண்ணியத்திற்காக கைதூக்கவேண்டியிருக்கும். ஆதலால் நான் சொல்வதை நன்றாய் கவனித்து உங்கள் இஷ்டத்தை தெரிவியுங்கள். தீர்மானத்தை எதிர்ப்பவர்கள்மீது கோபிப்பது கோழைத்தனமாகும். தீர்மானத்தில் உண்மையும், வீரமும் இல்லை என்று கருதவேண்டியதாகும்.

தவிர எதிர்ப்பவர்கள் அநேகர் உண்மையாகவே அவர்களுக்கு விளங்காமல் எதிர்த்தாலும் எதிர்க்கலாம். அவர்களுக்கு விளங்கவைக்கவேண்டியது நமது கடமை. அதனால் மற்றவர்களுக்கும் விளங்கும். அன்றியும் அவ்விளக்கம் மற்றவர்களுக்கு பிரசாரம் செய்யவும் உதவும்.

நண்பர்களே! கள்ளுக்கடை மறியலானது குடி நிறுத்துவதற்காக செய்யப்படுவதில்லை என்பது எனது அனுபவ ஞானமான முடிவு.

நான் தென்னாட்டில் மறியலை நடத்தி யிருக்கின்றேன். என் மனைவியையும், சகோதரியையும், என் பந்து சிநேகிதர்களின் தாயார், மகன் முதலியவர்களையும் கொண்டு நடத்தினேன். அநேக கடைகளை மூடினேன். எனது 600 தென்னைமரங்களை வெட்டினேன். 300, 400 மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சாமல்தானாகவே காய்ந்து போகும்படி செய்தேன். மறியலுக்காக நானும் எனது ஈரோட்டு நண்பர்கள் சுமார் 100 பேரும் ஜெயிலுக்குப்போனோம். திருச்சியில் நூற்றுக்கணக்கான பேர்களை எம். ஏ., பி. எல்., உட்பட சிறைக்கு அனுப்பினேன். கையில் 500 தொண்டர்களை வைத்துக்கொண்டு, ஆயிரம் தொண்டர்களை லிஸ்டில் வைத்துக்கொண்டு நானும் நண்பர் திரு இராமநாதனும் மதுரையில் தினம் நான்கு நான்கு பேர்களாக 100 தொண்டர்கள் வரை ஒவ்வொரு வருஷ தண்டனைக்கு அனுப்பினேன். மதுரை சர்க்காரார் திணறினார்கள். அந்தசமயத்தில் திடீரென்று திரு சி இராஜகோபாலாச்சாரியார் மறியலை நிறுத்தும்படி உத்திரவு செய்தார். அடிதடி, வசவு, பலாத்காரம் ஒன்றுமே நாங்கள் செய்யவில்லை. தொண்டர்கள் தண்டிக்கப்பட்டஉடன் அதிகாரி என்னிடம் வந்து பேசுவார். போலீசார் எனக்கு வெகுமரியாதை செய்வார்கள். அதிகாரிகள் வெட்கப்படுவார்களே யொழிய நம்மீது குரோதமோ, துவேஷமோ இல்லை. அப்படிப்பட்ட சமயத்தில் மறியலை நிறுத்த நானும் திரு. இராமநாதனும் சம்மதிக்கவில்லை, அப்படியிருக்க நாங்கள் மறியலை நிறுத்த சம்மதிக்காவிட்டால் தான் இராஜிநாமா செய்துதனது தலைவர் பதவியை திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்கு அளித்து விட்டுப்போவதாய்ச் சொல்லி பயமுறுத்தி மறியலை நிறுத்தி விட்டார். 100 பேர் சிறையில் 1 வருஷம் தண்டிக்கப்பட்டிருக்க, 500 பேர் தயாராயிருக்க மறியலை நிறுத்திய உடன் எங்கள் மனம் கஷ்டப்பட்டு விட்டது. காரணம் என்ன என்று பார்த்தபோது நாகப்பூர் கொடி சத்தியாக்கிரகத்திற்கு தொண்டர்கள் போதவில்லை என்றும் ஜமநாதபஜாஜ் ஆரம்பித்த சத்தியாக்கிரகம் தோல்வி அடைந்தால் அவருக்கு அவமானம் என்றும், அவர் வேலையை விட்ட வக்கீல்களுக்கு பல லக்ஷ ரூபாய் கொடுத்தவர் என்றும் திரு இராஜகோபாலாச்சாரியார் சமாதானம் சொன்னார். அந்தக் காரணமாக எல்லா மறியலும் நிறுத்தப்பட்டது. இதனால், மறியலுக்கு பயந்து கள்ளுக்கடை ஏலமெடுக்காதவர் நஷ்டப்படவும் துணிந்து குறைந்த தொகைக்கு ஏலத்தில் எடுத்தவர், கொள்ளை லாபம் சம்பாதிக்கவும் சர்க்காரார் இந்த நஷ்டத்தின் சாக்காய் இந்திய மக்களின ஆரம்பக்கல்வியின் வாயில் மண்ணைப் போடவுமே ஏற்பட்டது. மற்ற பெரிய கல்வி இலாகா அதிகாரிகள் சம்பளம சிறிதும் குறையவில்லை. மறியலால் கள்குடி குறையாது குறையாது, மூக்காலும் குறையாது என்று உறுதி கூறுவேன்.

இத்தீர்மானத்தை எதிர்த்தவரே தான் பேசும்போது ஒரு வார்த்தை சொன்னார். அதாவது தங்கள் மறியலால், கடையில் வியாபாரம் குறைந்து விட்டதாகவும், ஆனால் தெருக்களில் பலகாரம் விற்பதுபோல் பாட்டல் பாட்டல்களாய் எடுத்துச் சென்று விற்கப்படுகிறதென்றும் சொன்னார். ஆகவே மறியல்காரர்களை நான் ஒன்று கேட்கின்றேன். அதாவது தங்கள் மறியலின் காரணமாக கள்ளுக் கடைகளில் கள்ளுவிற்பதைத்தடுத்து, வீதி வீதியாய் விற்கும்படியான நிலைமை ஏற்பட்டதற்கு மறியல் தொண்டர்களோ அவர்களது ‘உலகம் போற்றும்’ ஒப்பற்ற தலைவரோ, என்ன பரிகாரம் செய்ய போகிறார்கள்? என்று கேட்கின்றேன்.

கள்ளு இலாகாவை நடாத்தும் மந்திரியையாவது, கள்ளு இலாகா அதிகாரிகளையாவது வீதியில் கள் விற்கும் மக்களையாவது இந்த மறியலின் மூலமாக அசைக்கமுடியுமா? என்று கேட்கின்றேன். கள்ளுக்கடை மூடிவிட்டால் தெரு விற்பனைகள் எங்கு போய்விடும்? லைசென்சு இல்லாமல் மாமா கட்டி இறக்கும் கள் எங்குபோய்விடும்? ஆகவே, மறியல்குடியைநிறுத்துவதற்காகவா? அல்லது வயிற்றுப்பிழைப்புக்கோ விளம்பரத்திற்கோ, கள்ளுக்கடைக்காரரிடம் வியாபாரம்பேசி, ஆச்சிரமம் வைத்து, கொடிதூக்கிக் கொண்டு திரிந்து, பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்கும் ஓட்டு வாங்கிகொடுப்பதற்காகவா? என்று உங்களைக் கேட்கின்றேன். மறியலால கள்குடி நிறுத்தமுடியாது என்று நானமாத்திரம் சொல்லவரவில்லை. திரு. இராஜகோபாலாச்சாரியார் சொன்னதையும். இப்போது நான் சொல்லவரவில்லை. ஆனால் திரு காந்தி—உங்களால் மகாத்மா என்று சொல்லப்படும் உங்கள் தலைவரான திரு காந்தி அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதை சொல்லுகின்றேன் கேளுங்கள்.

அதாவது ‘குடிகாரர்கள் தாங்களாகவே குடியை விட்டாலொழிய குடியை நிறுத்தமுடியாது. கள்ளுக்கடைகளை மூடிவிடச் செய்வது நம்வேலையல்ல. மூடினாலும் திருட்டுத்தனமாக இப்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

உயிர்விட நேரிடினும் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தனி உரிமை கொடேன்.

("ஜஸ்டிஸ்" தலையங்கம் 14—10—31.)

இந்திய மாணவர்களின் சங்கத்தில் காந்திஜீயை வரவேற்ற பொழுது முஸ்லீம்களையும் சீக்கியர்களையும் தவிர்த்து ஏனைய வகுப்பினர்களை இடம் தீண்டாதாரையும், இன்னுமிருக்கக்கூடிய சிறுபான்மையான வகுப்பினர்களையும் எதிர்த்து, அவர்களுடைய உரிமை மிகவும் உக்கிரமாகத் தாக்கிப் பேசினர். "என்னுடைய உயிர்போனபோதிலும் சரியே, நான் அவர்களுடைய உரிமையைப் போராடி, எதிர்த்தே நாசம் தீருவேன் என்னுடைய இம்முயற்சியில் நீங்களும் என்னுடன் சேர்ந்து பிரதிநிதிகள் [டெலிகேட்டுகள்] வேஷம் போட்டுக்கொண்டு நடித்தலையும், அவர்களுடைய வஞ்சகச் செயல்களையும் வெளிப்படுத்தி, அவர்களால் கூறப்பட்ட வார்த்தைகளை அவர்கள் திரும்பவும் வாப்பீஸ் வாங்கிக் கொள்ளும் படியாகச் செய்யவேண்டு"மென அவர் அப்பொழுது கூறியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர சம்பந்தமான காரணங்களை முன்னிட்டே தான் அவர் முசமதியர்கள், சீக்கியர்கள் ஆகிய இருவகுப்பினர்களுடைய விருப்பங்களுக்கும், வேண்டுகோள்களுக்கும் பலவந்தமாக கட்டுப்பட நேர்ந்ததெனவும், ஆனால் எத்தகைய முகாந்திரங்களைக் கொண்டும் வேறு எந்த சமூகத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதற்கு தாம் ஒத்துக்கொள்ளமுடியவே முடியாதென அவர் மீண்டும் கூறியிருக்கிறார். காந்திஜியின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டு வந்திருக்கக்கூடியவர்கள், தனிப்பட்ட முறையில்---அதாவது அவரைப் பொறுத்தவரையிலும் உண்மையான சமூக சீர்திருத்தவாதிகளில் அவரும் ஒருவர் தானெனவும், தங்களுடைய ஜீவியத்தில் தீண்டாமையின் கொடுமையை யொழிப்பதற்கான முறையில் ஓர் அநுபவசாத்தியமான உதாரணத்தைக் காண்பித்தவரென்பதையும் ஒருவரும் மறுத்துரைக்கமுடியாது. தீண்டாமையின் விஷயமாய் காந்திஜீ அவர்களுக்கிருக்கும்படியான பலத்த நோக்கமும், ஆக்ஷேபணைகளும் இந்தியாவிலேயே வேறு ஒருவருக்கும் இருக்காது. நாம் முன்னொரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்காண்பித்துள்ளபடி, அவர் தீண்டாமையென்பது இந்தியாவைவிட்டு அடியோடொழிந்தாலன்றி, இந்தியாவானது சுயராஜீயத்திற்கு அருகதையாவேயாகாது என பன்முறையும் உரைத்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்கால நிலைமையைப்பற்றிய கவலையும், அவர்களுடைய தற்கால பரிதாபகரமான நிலைமையிலிருந்து அவர்களை உயர்த்தவேண்டுமென்கிற சிந்தனையும் அவருக்கு அதிகமாகயிருப்பதினாலேயேதான் அவர்கள் முன்னேற்றமடைவதற்குத் தடையாயிருக்கும்படியான சமூகத்திலுள்ள அந்த வழக்கத்தையும், சிந்தனையையும் அடியோடொழிப்பதற்காகவேண்டி அவர் தம்மாலியன்ற வரையிலும் அரும்பாடுபடத்தயாராயிருக்கின்றார். யாவராலும் விரும்பப்படக்கூடிய இவ்விஷயத்தை திருப்திகரமாக நிறைவேற்றுவதற்காக வேண்டி அனுஷ்டிக்கப்படும் முறைகளை நாம் கவனிக்கும்பொழுதுதான், காந்திஜீயின் கொள்கைகள் மக்களால் எவ்வளவுதூரம் போற்றப்படுமென அவர் கருதுகின்றாரோ, அவ்வளவுதூரம் அவைகள் போற்றப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் இருப்பதைக் காண்கிறோம். தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப்பொறுத்த வரையிலும் தற்காலம் ஹிந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் சமூகப்பகிஷ்காரமானது நீடித்துநிற்கக்கூடாதெனவே ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டபோதிலுங்கூட, ஒடுக்கப்பட்ட வகுப்பினரைச்சார்ந்த மக்களுக்குள்ளும், இதர ஏனைய ஹிந்து மக்களுக்குள்ளும் யாதொருவிதமான வேற்றுமைகளும் வேறுபாடுகளும் தோன்றாமலிருக்கும்படியான நிலைமை வரும் வரையிலும், சமூக அந்தஸ்தில் தீண்டப்படாதாருக்கும், 'தீண்டக்கூடியவருக்கும்' உள்ள வித்தியாசங்களும், பாகுபாடுகளும் ஒழிந்துபோகுமளவரையிலும், கடந்த அநேக நூற்றாண்டுகளாக ஹிந்து சமூகத்தின் எல்லைக்குப்புறம்பே ஒதுக்கப்பட்டு, அவர்கள் அருகே வந்தால் ஒருவித அருவருப்பும், அசங்கியமுமடைந்து கொண்டு வந்த தன்மையானது மாறும் வரையிலும், அதாவது ஒரு புதிய நிலைமை யேற்படும் வரையிலும், தாழ்த்தப் பட்ட வகுப்பினைச் சார்ந்த மக்கள் பெரும்பான்மையான ஹிந்து சமூகத்தினரின் கொடுமைகளினின்றும், கர்வம் பிடித்த மனப்பான்மைகளினின்றும், பிறரை அடக்கியாளவேண்டுமென்கிற அகங்காரம் பிடித்த செய்கைகளினின்றும் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சில பிரத்தியேகமான உரிமைகளும், சில அரசியல் பாதுகாப்புகளும் கண்டிப்பாய் அவர்களுக்கு அளிக்கப் பட்டே தான் தீரவேண்டுமென்கிற எண்ணமானது இருந்து கொண்டு தான் வருகின்றது.

தாழ்த்தப் பட்ட வகுப்பினைச் சார்ந்த, அவர்களுடைய வாழ்க்கையில் அவர்களுக்கு தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டு வரக்கூடிய சம்பவங்களை கவனித்தோமானால், அப்பொழுது இத்தேசத்தின் எதிர்கால அமைப்பானது எத்தகையதாய் இருந்த போதிலும் சரியே, பிரதிநிதிகளின் ஸ்தாபனங்கள் எத்தகைய மூலாதாரத்தைக்கொண்டு நிருமாணம்செய்யப்படுவதாயிருந்தபோதிலும் சரியே, அவர்களுடைய பிரஜா உரிமைகள் போதுமானபடி விசேஷமாகப் பாதுகாக்கப்படாததையிலும், அவர்களுடைய நிலைமையானது இன்னும் மோசமானதாகவேதான் இருக்கக்கூடும். மூலாதாரமான உரிமைகளும் இன்னும் இதர உரிமைகளும் எதிர்கால அமைப்பில் சிறிதும் பாதிக்கப்படாதென தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பகிரங்கமாகக் கூறப் பட்டிருப்பதானது சிறிது உதவியாகவும், ஆறுதலளிக்கக் கூடியதாகவுமிருந்த போதிலும்கூட, இவைகளுக்கனுசரணையாகவும், சேர்ந்தாப் போலும் அவர்களுக்குத் தனித்தொகுதி தேர்தல் முறையை அளித்தே தான் தீரவேண்டும். அப்பொழுது தான் அவர்கள் சட்டசபைகளுக்குத் தங்களுடைய உண்மையும் நியாயமுமான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அனுப்புவதற்குச் சாத்தியமாயிருக்கும். அப்பொழுது தான் அத்தகையப் பிரதிநிதிகளும் தங்களுடைய வகுப்பினர்களின் உரிமைகளை தைரியமாக நிலைநாட்டவும், தங்களுடைய சமூகத்தினர்கள் அடைந்து வரும் எண்ணிறந்த துன்பங்களையும், கஷ்டங்களையும் ஒழிப்பதற்கு உக்கிரமாகவும், வன்மையாகவும் போராட முடியும். நடைபெற்றுக்கொண்டு வந்த சம்பவங்களிலிருந்தும், தற்காலமிருந்து வரக்கூடிய நிலைமைகளிலிருந்தும் அவர்கள், தங்களுக்குத் தனித் தேர்தல் தொகுதியானது அளிக்கப்படவில்லையானால் ஹிந்துக்களிருக்கக்கூடிய ஒரு தேசத்தில்-அதிலும் பெரும்பான்மையான மக்கள் வர்ணாச்சிரம தர்மிகளாகவும், வைதீகர்களாகவும், எதையும் எதிர்த்துத் தாக்கக்கூடியவர்களாகவுமுள்ள ஒரு தேசத்தில், மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குள் கோழையும், பயங்காளியுமான ஒரு பிரதிநிதியைத் தாங்களே தேர்ந்தெடுத்து, அதாவது "போடு தோப்புக்கரணம்" என்றால், "எண்ணிக்கோ சாமி" என்று சொல்லக்கூடிய மனப்பான்மையுள்ள ஒருவரை நியமித்துக் கொள்ளக்கூடுமாதலால், நாட்டிலுள்ள சட்ட சபைகளில் அவர்களிருந்து வருவதே தெரியாமல் போகக்கூடும்.

பக்ஷபாதமின்றியும், நடுநிலைமையினின்று சிறிதும் பிறழாமலும் ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு இதைப்பற்றி ஆழ்ந்து யோசனை செய்தாலும் அப்பொழுது அவர் அவ்வளவுக்கவ்வளவு தனித்தேர்தல் முறையானது தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு ஓர் இன்றியமையாத தேவைதானென்பதான ஆக்ஷேபிக்க முடியாத ஓர் முடிவுக்குத்தான் வரமுடியும். மேலும், இந்தியாவின் சமூக வாழ்வில் நல்ல காலம் தோன்றும் வரை நாம் இதையேதான் அங்கீகரித்து, ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதான முடிவுக்குத்தான் வரமுடியும். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சார்ந்த வகுப்பினர்களுக்குள்ளும், தங்களுடைய இன்னல்களையும், துன்பங்களையும், கஷ்டங்களையுமறிந்து கொண்டவர்களும், உயர்தர இந்துக்களால் தங்களுக்கு அளிக்கப்படும் அவமதிப்புகளையும், இகழ்ச்சிகளையும், அகௌரவங்களையும், மனப்புண்களையும் அனுபவித்தவர்களும், மதத்தின் சட்டங்களும், கடவுளின் கருணையும் தங்களை அத்தகைய நிலைமையிலேயே தானிருக்கும்படி விதித்திருப்பதாக இதுவரை எண்ணிக்கொண்டு சமூக வாழ்க்கையில் தங்களுக்கேற்படும் இடுக்கண்களையும் கொடுங்கோன்மைகளையும் மிகப்பொறுமையுடன் சகித்துக்கொண்டு வந்தவர்களும், இப்பொழுது தங்களுடைய பரம்பரையான தூக்கத்தினின்றும் விழித்தெழுந்து, சுயேட்சையாய் இருக்கவேண்டுமென சந்தடி செய்து கொண்டும், சத்தம் போட்டுக்கொண்டுமிருக்கின்றார்கள். நெடுநாட்களாக தங்களை வலுவாக சேர்த்து இணைக்கப்பட்டிருந்த சமூகக் கட்டுகளினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டுமெனப் பெரிதும் அவர்கள் விரும்புகின்றார்கள். தனித்தொகுதிகளின் மூலமாக மட்டுந்தான் தங்களுடைய நிலைமையானது பாதுகாக்கப்படக்கூடுமென்றும், ஹிந்துசமூகத்தில் நாளாவட்டத்தில் அவர்கள் தங்களுடைய நியாயமானதும், உண்மையானதுமான நிலைமையை யடைய முடியுமெனவும் அவர்கள் கருதுகின்றார்கள்.

ஹிந்துக்களினுடைய ஆதிக்கத்திலும், அந்த ஹிந்துக்களையே பின்பற்றுகிறவர்களினுடைய ஆதிக்கத்திலுமிருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் சில சங்கங்களிலும், முக்கியமாக காங்கிரசின் கொள்கைகளையே பெரும்பாலும் அனுஷ்டித்துக்கொண்டுவரும் சில சங்கங்களும் மட்டும்தான் தங்களுக்குத் தனித் தேர்தல் தொகுதியானது அவசியமில்லை யெனவும், வேண்டாமெனவும் ஒருக்கால் உரைக்கலாம். ஆனால் திரு. அம்பட்கார் போன்ற ஒடுக்கப் பட்ட சமூகத்தினர்களின் உண்மைப் பிரதிநிதிகள் தங்களுடைய சமூகத்தினரின் நியாயமான உரிமைகளை மிகத்தெளிவாகவும், குற்றமின்றியும் விளக்கி

தொடர்ச்சி 14ம் பார்க்க, பக்கம்

சென்னையில் ஆதிதிராவிடர்கள் பொதுக்கூட்டம்.

திரு. காந்தி மீது கண்டனம்.

காங்கிரசை நாங்கள் நம்பவில்லை.

பார்ப்பனர்கள் காலித்தனத்திற்கு ஏற்ற புத்திமதி.

வட்டமேஜை மகாநாட்டிற்குத் தந்தி.

முதல் கூட்டம்.

சென்ற 11—10—31 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஆதிதிராவிட மகாசபையின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் விஜயம் செய்திருந்தார்கள். அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி தலைவரவர்கள் முன்னுரையாக "வட்டமேஜை மகாநாடும், தாழ்த்தப்பட்டார் பிரதிநிதித்துவமும்" என்பதுபற்றி மிக விளக்கமாகக் கூறினர்.

அதன்பின் தோழர்களான பொன்னு, தங்கராஜா, அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் பேசினார்கள்.

தோழர்கள் பொன்னும், தங்கராஜும் பேசியதின் சாரம் பின் வருமாறு:— வட்டமேஜை மகாநாட்டிற்கு தாழ்த்தப்பட்டவர்களின் பிரதியாக வடநாட்டிற்கு டாக்டர் அம்பெத்காரவர்களும் நம் நாட்டிற்கு கனம் சீனிவாசன் அவர்களும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றவகுப்பினர்களைப் போல சகோதரத்துவத்துடனும் சமத்துவத்துடனும் சமூக இயலிலும், அரசியலிலும் நடத்தப்படுவதற்கு மற்ற முகமதிய—சீக்கிய சமூகங்களைப்போல் வரப்போகும் அரசாங்கத்தில் தனித்தொகுதி வேண்டும். அப்படியிருந்தாலொழிய இப்போது தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படும் 7 கோடி மக்கள் முன்னேறுவதற்கு வழி கிடையாது. ஏழைகட்காகவும் தாழ்த்தப்பட்டவர்கட்காகவும் பாடுபடுவதாகக்கூறி வந்த திரு. காந்தியவர்கள் இப்போது லண்டனில் வட்டமேஜை மகாநாட்டில் "தாழ்த்தப்பட்டவர்கட்கு தனித்தொகுதி வேண்டுவதில்லை. அவர்கட்கு வேண்டிய உரிமைகளை இந்திய மகா சபையாகிய காங்கிரஸ் மகாசபையே வழங்கிவிடும்' என்றும், 'கூட்டுத்தொகுதிதான்' வேண்டுமென்றும் பேசியிருக்கின்றார். அத்தோடு நம் பிரதிநிதியான டாக்டர் அம்பெத்கார் அவர்களை 'தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியல்ல'வென்றும், 'தான் தான் தாழ்த்தப்பட்டவர்களின் உண்மைப் பிரதிநிதி'யென்றும் சொல்லியிருக்கிறார். காந்தியின் கூற்றை நாம் முழுதும் வன்மையாகக் கண்டிக்கிறோம். காந்தியின் போக்கும் காங்கிரசின் யோக்கியதையும் எங்கட்கு நன்றாகத் தெரியும். அவர்களிடம் கூட்டுத்தொகுதியை அரசாங்கத்தார் கொடுத்துவிட்டால் இன்னும் காந்தியின் இராம இராஜ்யத்தில் நாங்கள் உயிருடன் கூட வாழமுடியாது. காந்தியையும் காங்கிரசையும் நாங்கள் நம்பவில்லை. எங்கட்கு வேண்டுவது தனித்தொகுதிதான். எங்கள் பிரதிநிதி, டாக்டர் அம்பெத்காரும் சென்னை கனம் சீனிவாசன் அவர்களும் தான். எனவே எங்கள் உரிமையில் காந்தி தலையிடுவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும் என்று பேசி முடித்தார்கள்.

பின் தோழர் அ. பொன்னம்பலம் பேசியதின் சாரம் பின்வருமாறு:— நான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக மிகவும் சந்தோஷப்படுகின்றேன். இங்கு கூடியுள்ள உங்கள் கருத்தையும் தலைவர் முன்னுரையையும் பிரசங்கிகள் பேச்சையும் கேட்டேன், நானும் அவர்கள் கூறியதைப்போல் தான் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். இங்கு கூடியுள்ள உங்கள் சமூகத்தை இந்நாட்டில் உயர்ந்த ஜாதியிலே தாங்கள் பிறந்ததாகக் கருதிக்கொண்டிருக்கும் உயர்ஜாதி வெறியர்களால் நீங்கள் தினம் பல கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை நான் நன்கறிவேன். உங்கட்கு படிக்கும் உரிமை தடுக்கப்பட்டது. வீதியில் நடக்கும் உரிமை தடுக்கப்பட்டது. கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமை தடுக்கப்பட்டது. பொது ஸ்தாபனங்களில் கலந்து கொள்ளும் உரிமைகள் தடுக்கப்பட்டது. சுருக்கமாகக் கூறினால் மிருகத்திலும் கேவலமாக—மலத்திலும் கேவலமாக மதித்து இழிவுபடுத்தப்பட்டு, கொடுமைக்குள்ளாக்கப்பட்டு கஷ்டப்பட்டு வருகிறீர்கள். இன்றுள்ள ஆட்சியின் சில வசதிகளால் நம் மக்கள் சிறிது படிக்கவும், மனிதத்தன்மை பெறவும், பொது ஸ்தாபனங்களில் இடம் பெறவும், நாகரீகத்தோடு வாழவும் பகுத்தறிவோடு இயங்கவும் கற்றுக்கொள்ள முடிந்தது. இன்றுள்ள அந்நிய ஆட்சிமுறைதான் எல்லா வகுப்பினர்கட்கும் வகுப்புரிமை வழங்கவேண்டி இந்தியப் பிரதிநிதிகளை அழைத்து ஆலோசிக்கும் லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் நம்மவர்கள் இருவருக்கும் அங்கு இடம் கொடுத்திருக்கிறது. நமக்காகச் சென்ற நம் பிரதிநிதிகள் தங்கள் வகுப்பாருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள். இதனை தோழர் காந்தியவர்கள் ஆட்சேபிக்கிறார் வகுப்புவாதம் கூடாதென்கிறார். வகுப்புவாதப்படி பிரதிநிதிகளை அழைக்கப்பட்டிருக்கிற வட்டமேஜை மகாநாட்டிற்கு காந்தி சென்றது முழுத்தவறு. அதிலும் முகமதியர்கட்கும் சீக்கியர்கட்கும் தனித்தொகுதி ஒதுக்குவதை ஒப்புக்கொண்டு தலையாட்டி, முகமதியர் தொகுதிக்கு டாக்டர் அன்சாரியை நியமிக்க அரும்பாடுபட்டது எதற்காக? தாழ்த்தப்பட்டவர்கட்கு தனிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்று கூறுவதைப்போல் சீக்கியர்கட்கும் தனித்தொகுதி வேண்டாம் என்று ஏன் கூறவில்லை? கூறியிருந்தால் காந்தியின் கதி என்னவாகும்? இவர் தான் (காந்திதான்) காங்கிரஸ்மகா சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டுத்தொகுதி பெற்று வரப்போனார். இவர் பின்னே காந்தியின் சீடர்களான மாளவியாவும், சரோஜினியும் எதற்காகச் சென்றார்கள்? எப்படிச் சென்றார்கள்? வைதீகத்தையும், இந்து மததர்மத்தையும் தீட்டுப்படாது காப்பாற்ற கங்காஜலமும் களிமண்ணும், நாணப்புல்லும், பசுமாட்டு பஞ்சகவியங்களோடு, பிராமணப் பரிசாரகனையும் கூட்டிக்கொண்டு கும்பகோணம் சங்கராச்சாரி கோஷ்டியைப் போன்றல்லவா போயிருக்கிறார்கள். காந்திதான் கூட்டுத் தொகுதி பெறப்போனார் இவர்கள் எந்தத்தொகுதி பெறப்போனார்கள்? இவர்கட்கு முன் முதல் கப்பலிலேயே போயிருக்கிற இந்து பத்திரிகை ஆசிரியர் எ. ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீமதி சுப்பராயன் போன்ற பழுத்த தேசபக்தர்கள் யாருக்கு ப்பிரதிநிதியாகப் போனார்கள்? தாங்கள்போய் என்ன சாதிக்கமுடியுமென்று போனார்கள்? ஒன்றுமில்லை அரசாங்கச் செலவில் மேல்நாட்டு யாத்திரை செய்துவிட்டு காந்திக்கு பக்கமேளம் வாசிப்பதற்கும், ஆமாம் போடுவதற்கும் தான் போனார்! எனவே தாழ்த்தப்பட்டவர்கட்கு காந்தி எந்த மாதிரி உதவிபுரிகிறார் என்பது நன்கு விளங்கிவிட்டது. தாழ்த்தப்பட்டவர்கட்கு வேண்டிய உரிமைகளை "காங்கிரஸ்" கவனித்துக்கொள்ளுமென்று காந்தி கூறுகிறார். இதுவரை காங்கிரஸ் என்ன செய்தது? இனி என்ன செய்யப்போகிறது? ஸ்வராஜியத்தைக் கொண்டுவந்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டி வைதீகத்திற்கு முடிசூட்டி மநு நீதியை சட்டமாக்கப் போகின்றதா? வேறென்ன செய்யப்போகிறது? என்று யோசியுங்கள். காங்கிரஸ் புரட்டும், காந்தியின் ஏமாற்றும் இனி நீண்டநாளைக்கு நடக்கமுடியாது. இந்நாடு முழுதும் வகுப்புவாதம் ஒழிய நாம் ஆசைப்படுகிறோம். ஆனால் பணக்காரனிடமும், உயர்ந்த ஜாதிக்காரனிடமும் நம் உரிமையை இப்போது விட்டுவிட முடியாது என்பதை நாம் திட்டமாய்க் கூற வேண்டும். நமக்கு இப்போது எல்லோருக்கும் கொடுப்பது போல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கொடுத்துவிட்டு பின் காந்தியின் ஆசைப்படி வகுப்புவாதம் ஒழிந்தால் நாமும் வகுப்புவாதத்தை விட்டுவிட என்றும் தயாராகவேதான் இருக்கின்றோம் என்று பேசிமுடித்தார் அதன் பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை நகரின் தாழ்த்தப்பட்டாருடைய இக்கூட்டம் "இந்த ஏழைமக்கட்கு வரப்போகும் அரசாங்கத்தில் தனித்தொ

[தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

வட்டமேஜை மகாநாடு.

எத்தகைய முடிவேற்படக்கூடும்?

(திரு: பிபின் சந்திரபாலர்.)

)O(

இந்தியாவிலுள்ள அரசியல் வாதிகளின் மனமெல்லாம்வட்ட மேஜை மகாநாட்டின் நடவடிக்கைகளின் மீதே நாட்டமுள்ளதாயிருக்கின்றன. நமது காங்கிரஸின் அரசியல் வாதிகளோ இந்தமகாநாட்டின் மீது, ஒரு சமயம், நம்பிக்கை யில்லாதவர்களாகவே யிருக்கலாம். அல்லது ஆங்கிலேய அதிகாரிகள் இந்தியாவை ஆட்சி புரிவதினின்றும் அடியோடு விலகி, விட்டுவிட்டாலல்லாமல் தற்கால ஆங்கிலேயர்கள் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் அவர்களுக்கு நம்பிக்கையென்பதேற்படா திருக்கலாம். ஆனால், அவைகள் யாவும் வெறும் வெளி வேஷமேதானாகும். அவர்களுடைய ஹிருதயத்திற்குள்-பூர்ண சுயேச்சைக்காரர்களுக்கும் கூட இந்த வட்டமேஜை நடவடிக்கைகளினால் தங்களால் விரும்பப்படக் கூடியவைகள் அனைத்தும் தங்களுக்குக் கிடைக்காமல் போனாலும் கூட. ஏதாவதொன்று ஏற்படக்கூடுமென்ற நம்பிக்கையுள்ளவர்களாகவே தானிருக்கின்றார்கள்.

உண்மையைக் கூறுமிடத்து, அரசியல் துறையில் ஈடுபட்ட அநேகர் ஆங்கிலேயர்கள் உடனே இந்தியாவை அறவே விட்டு விட்டு, தங்களுடைய பெண்டு பிள்ளைகளுடனும், மூட்டை முடிச்சுகளுடனும்சென்றுவிடவேண்டுமென விரும்பவேயில்லை. புரட்சி செய்ய வேண்டுமென விரும்பி உணர்ச்சியும், லஜ்ஜையுமற்ற வாலிபர்கள் என்ன தான் செய்துகொண்டு வந்த போதிலும் கூட, தேசத்திலுள்ள நிதான புத்தியுள்ள அறிவாளிகள் யாவருக்கும் ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடியோடு விட்டு, இப்பொழுது விலகிக் கொண்டால் தாங்கள் விரும்பும் சுயராஜ்யம் தங்களால் உண்மையாகவே அடைய முடியாதென்பதும், ஆனால் தேசமெங்கும் பெருவாரியான கலகங்களும், வகுப்புச் சண்டைகளும் தான் நடைபெற்றுக் கொண்டு வருமென்பதும் தெரியும்.

ஜனங்களின் நிலைமை.

ஆகையினால், முன் காலத்தில் நடைபெற்றசிப்பாய்கலகத்தைப்போல் ஒருசமயம் இப்பொழுதும் ஒருபுரட்சி நடைபெறக் கூடுமோவென பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. அக்கலகமானது சிப்பாய்களால் உண்டாக்கப் பட்ட கலகமேயல்லாமல், பொதுமக்கள் அக்கலகத்தில் ஒருவிதமான பங்கும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆதிகாலத்தில் அரசர்களுக்குள்ளும், இதர வகுப்பினர்களுக்குள்ளும் அவரவர் தங்களுடைய அதிகாரங்களை நிலை நாட்டுவதற்காக ஒருவருக்கொருவர் அடிக்கடி போராடிக் கொண்டு வரும் பொழுது ஜனங்கள் எப்படி தூரமாகநின்று,வேடிக்கைமட்டும் பார்த்துக்கொண்டிருந்தார்களோ, அதுமாதிரியாகவேதான் இப்பொழுதும் அவர்கள் தூரமாகநின்று வேடிக்கைமட்டும் பார்த்துக் கொண்டு தான் வருவார்கள். எதிர்கால நிலைமையைப் பற்றி பயமுறுத்தக் கூடியதிது வாகத்தானிருக்கலாம். அதாவது புரட்சிக்காரர்கள் ஜயிக்கின்றார்களா? அல்லது கவர்ன்மெண்டார் ஜயிக்கின்றார்களா? என்பதை பாமரமக்கள் தூரமாக நின்று வேடிக்கைமட்டுந்தான்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நமது பொதுமக்களின் எதிர் கால நிலைமையானது மாறி விடும்படி செய்யும்படியான ஓர் யுத்தத்தை நமது பைத்தியக்கார தேசபக்தர்கள் ஆங்கிலேய அரசாட்சிக்கு எதிரிடையாகத் தொடுப்பார்களெனநாம் சிறிதும்பயப்பட வேண்டிய அவசியமே யில்லை'

பூர்ண சுயேச்சையே வேண்டுமென கூக்குரலிட்டுக் கொண்டும், சட்ட மறுப்பு நடத்துவதாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கும் காங்கிரஸ் கூட, வட்ட மேஜை மகாநாடு ஒரு சமயம் தோல்வியடையுமேயானால் ஆங்கிலேய அரசாட்சியை அடியோடு கவிழ்த்து விட வேண்டுமென உண்மையாகவே விரும்ப வில்லை. அவர்களுடைய கலகமானது ஆங்கிலேய சட்டத்தால் பாதுகாக்கப் பட்டிருக்கிறது: இத்தகைய சட்டத்தாலேற்பட்டிருக்கும் பாதுகாப்பானது வாபீஸ் வாங்கப்பட்டு, காங்கிரசானது சட்டத்திற்கு விரோதமான ஓர் ஸ்தாபனமென உறுதியாகக் கூறப்பட்டு, கலகக்காரர்களுக்கு விதிக்கப் பட்ட தண்டனை இவர்களுக்கும் விதிக்கப் படுமேயானால், அப்பொழுது பூர்ண சுயேச்சை வேண்டுமென்கிற அவர்களுடைய ஆவலும், வைராக்கியமும், ஆவேசமும், "ஆங்கில ஆட்சியை ஒன்று சீர்திருத்துவது அல்லது அடியோடு ஒழித்துவிடுவது' என்று நிறைவேற்றப்பட்ட அவர்களுடைய தீர்மானங்களும் 'சூரியனைக்கண்டபனிபோல்'உடனே இருக்குமிடந்தெரியாமல் மறைந்து விடும். அப்பொழுது இக்காரணத்தாலேற்படக்கூடிய 'பயமானது' காங்கிரஸ் மேடையைச்சுற்றிக்கொண்டிருப்பவர்களிடத்தில் ஓர் மந்திரம் போல் வேலை செய்யும்.

பாதிக்கப்படாத குடியானவர்கள்.

சாமானிய ஜனங்கள் யாவரும் ஏககாலத்தில் ஒன்றுசேர்த்திரண்டு, புரட்சி செய்வதற்கான சாதனங்களில்லை. குடியானவர்கள் அரசியல் பிரசாரங்களினால் இன்னும்போதுமான அளவு பாதிக்கப்படவில்லை. நகரங்களிலும், வியாபாரங்களுக்கு மத்தியஸ்தலமாயிருக்க கூடியவிடங்களிலும்தான் அரசியல் புரட்சியும், தொழில் சம்பந்தமான புரட்சியும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எத்தகைய மாறுபாடுகளாலும் நமது குடியானவர்கள் மட்டும் இன்னும் பாதிக்கப்படவில்லை. ஏதாவது ஒரு பட்டாளம் ஒரு கிராமத்தின்வழியாக செல்லும்பொழுது அதனால் தற்காலிகமாகவேண்டுமானால் ஏதாகிலும் சந்தடியுண்டாகி அவர்களுடைய கவனத்தைக்கெடுக்கலாம். ஆனால் அப்பட்டாளம் சென்றபிறகோ அவர்களுடைய மனதில் ஒன்றும் சாஸ்வதமான மாறுதல்கள் நிலைத்திருப்பதில்லை. குடியானவர்கள் இத்தகைய மனப்பான்மையுடனிருந்து கொண்டு வருவதால், சாமானிய ஜனங்கள் யாவரும் ஏககாலத்தில் ஒன்றுசேர்த்திரண்டு ஏதாவது அரசியல் புரட்சியாகிலும், அல்லது தொழில் புரட்சியாகிலும், செய்துவிடுவார்களென நினைப்பது சுத்த அறிவீனமேயாகும்.

புதிய ஆசைகள்.

இதர இந்திய மாகாணங்களின் அரசியல் நிலைமை எம்மாதிரியாக முற்போக்கடையுமென நாம் திட்டமாயுரைப்பதற்கில்லை. நாம் பத்திரிகைகளில் காணும் பொருளாதார நெருக்கடி நிலைமையினால் வங்காளத்தைப் பொறுத்தவரையிலும், வங்காளக்குடியானவர்களால் யாதொருவித அரசியல் புரட்சியோ, தொழில் சம்பந்தமான புரட்சியோ உண்டாகி விடவில்லை. 1857ம் வருடத்தில் நடைபெற்ற சிப்பாய் கலகத்தாலும் வங்காளமானது பாதிக்கப்படவேயில்லை.

பாமரமக்களுக்கு ஆதியிலிருந்து கொண்டு வந்ததான தன்னியக்கமின்மை அல்லது சலனமின்மையென்னும் தன்மையானது சாஸ்வதமாக நீடித்துக்கொண்டிருக்காது. அவர்கள் அதிதுரிதமாகவே தற்கால செல்வாக்கிற்கும், சக்திக்கும் ஆளாவதுமன்றி, பொருளாதாரம், அரசியல் ஆகிய இருதுறைகளிலுமுள்ள புதிய ஆவேசத்தினாலும், பேராசையினாலும் அவர்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றார்கள். தமிழ் பத்திரிகைகளினுதவியினால் அவர்கள் உலக சமாசாரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளுகின்றார்கள். போதாக்குறைக்கு தமிழில் நடைபெறும் பொதுக் கூட்டங்களாலும் அவர்கள் உலகவர்த்தமானங்களை சுலபமாக அறிந்துகொள்ளுகிறார்கள். ஆகையினால் அவர்களை நாம் இப்பொழுது கவனியாமல் இன்னும் மேற்கொண்டு அசட்டை செய்வோமானால், அது ஒரு பெரிய குற்றமேதானாகும். இந்தியாவின் எதிர்கால நிலைமையானது இவர்களால் ஒரு சமயம் நிர்ணயிக்கப்படலாமேயல்லாமல், பைத்தியம்பிடித்தவர்கள்போல், வீண் புரளி செய்யும் தேசபக்தர்களெனக் கூறிக்கொள்ளுபவர்களால் அல்ல. ஆகையால் ஆங்கில அரசியல் நிபுணர்களும், இந்திய அரசியல் நிபுணர்களும் இக்குடியானவர்களை ஒழுங்காகவும், கிரமமாகவும் நடாத்திச்சென்று, அவர்கள் விரும்பும் விடுதலையையளிக்கவேண்டும். அவர்கள் தற்காலமிருந்துகொண்டுவரும் பாமரத்தன்மையிலும், அறியாமையிலும், அந்தகாரத்திலும் இன்னுமிருந்து கொண்டே வரமாட்டார்களென்பதை நாம் திட்டமாயுணர்ந்துகொள்ள வேண்டும். ஆகையினால் அதற்கேற்றாப்போல் நாம் அவர்களை நடாத்திக்கொண்டு வரத்தவறிவிடுவோமேயானால், இன்றில்லாவிட்டாலும் நாளையாவது, அல்லது நாளையில்லாவிட்டாலும் அதற்கடுத்தநாளாகிலும் நம்முடைய அரசியல் தந்திரங்களையும், இராஜீயதந்திரங்களையும் எதிர்த்துப்போராடி அழித்தேதான் தீருவார்கள்.

திரு காந்தியின் நிலைமை.

இந்தியப்பாமர மக்களை முழுவன்மையுடன் கவர்ச்சி செய்யக்கூடிய சக்தி, வேறு எல்லாரையும்விட திரு காந்தி அவர்களுக்கே அதிகமாகவிருப்பதுதான், அவர் வெளித்தோற்றத்துக்குத்தலைவராக விளங்கிக்கொண்டு வருவதற்கு அஸ்திவாரமாயிருந்து கொண்டுவருகின்றது. ஓர் ரிஷியாகவோ, அல்லது ஒரு மகாத்மாவாகவோ தான் அவர், ஹிந்துபாமர மக்களின் மீது உண்மையாகவே ஓர்வித அதிகாரத்தை செலுத்திக் கொண்டு வருகின்றார். எப்படியிருந்தபோதிலும் அவருடைய அதிகாரமும், செல்வாக்கும் மதசம்பந்தமானதேயல்லாமல் உண்மையாகவே அரசியல் சம்பந்தமான செல்வாக்கும், அதிகாரமுமாகாது. அவருடைய ஒப்பற்ற தலைவர்பதவியானது மத பக்தியினாலேற்பட்டதேயாகும். அதுவும் நமது மக்களுடைய மனதில் பதிந்துகிடக்கும் மூடக்கொள்கைகளினாலும், மூடப்பழக்க வழக்கங்களினாலுமே தான். அரசியல் துறையைப் பொறுத்தமட்டிலும், தற்காலமிருக்கக்கூடிய இதர கணக்கற்றத் தலைவர்களைப்போலவே தான் திரு. காந்தியும் ஒரு தலைவராவார். ஹிந்துக்களுக்குள்ளாகவும்கூட, அவர்மட்டும் ஓர் பிரத்தியேகமான சர்வாதிகாரியாகவேமாட்டார். ஹிந்து மகாசபையின் தலைவர்கள்தான், மகாத்மாவைவிட அரசியல் துறையில் அதிக செல்வாக்கு வாய்ந்தவர்கள். முகமதியர்கள் அவரை ஓர் ரிஷியென்றாவது அல்லது ஓர் அரசியல் வாதியென்றாவதுகூட ஒப்புக்கொள்ளவோ, அல்லது அங்கீகரிக்கவோ வில்லை.

முறைமைப்படி அவரை சர்வாதிகாரியாக நியமித்த அவருடைய சொந்தக் காங்கிரஸ்கூட, அவருடைய சர்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.)

குடி அரசு

ஈரோடு 1931 அக்டோபர் 18௳

வட்டமேஜை மகாநாடு முறிந்தால் கவலைப்பட வேண்டியதில்லை.

—:0:—

வட்டமேஜை மகாநாட்டின் முதல் சப்கமிட்டி கூட்டமானது முறிந்து முடிவுபெற்று விட்டது. எப்படியெனில் "இந்தியர்களாகிய நாம் நமக்குள் இருக்கும் வகுப்பு வித்தியாசங்களுக்கு பரிகாரம் செய்து கொள்ள நமக்குள்ளாகவே ஒரு பைசலுக்கு வரமுடியவில்லை" என்கின்ற தான முடிவுக்கு வந்துவிட்டது.

எவ்விஷயத்தில் நமக்குள்ளாக நாம் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்கின்ற முடிவுக்கு வரப்பட்டது என்றால், நமக்கு ஆமிந்தாப்போல் பிரிட்டிஷாரால் வழங்கப்படப்போகும் சுதந்திரத்தையோ, அல்லது அவர்களிடம் இருந்து "கைபலத்தால்" தட்டிப் பிடுங்கிக்கொள்ளப்போகும் சுயேச்சையையோ நமக்குள் நாம் எப்படி பங்கிட்டுக்கொள்வது என்கின்ற காரியத்தில் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்று தீர்மானம் ஏற்பட்டுவிட்டதோடு, இந்தியாவின் "ஏகதலைவர்" அல்லது "ஏகப்பிரதிநிதி" நானே தான் என்று சொல்லப்படும்—சொல்லிக்கொள்ளவும் உரிமை கொண்டாடும் திரு. காந்தியவர்களாலேயே "நமக்குள் நாம் ஒரு முடிவுக்கு வரும் விஷயத்தில் நான் எவ்வளவோ பாடுபட்டும் தோல்வி அடைந்து விட்டேன்" என்று விளக்கமாகத் தத்துவார்த்தத்திற்கு இடமில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்டாய் விட்டது.

இந்த நிலைமையில் இனி மேலால் நடக்கவேண்டிய காரியம் என்ன என்கின்ற விஷயத்தில் ஒருவருக்கொருவர் தந்திரமும், சூழ்ச்சியும் செய்ய வேண்டியதவசியமாய் விட்டதுடன் திரு. காந்தியவர்கள் தான் தோல்வி அடைந்து விட்டதற்கு ஏதாவது ஒரு சமாதானத்தை சொல்லித்தீரவேண்டியதாய் விட்டது. இந்த இரண்டும் சேர்ந்து காங்கிரசினுடையவும், திரு. காந்தியினுடையவும் உண்மையான நிறத்தையும், தத்துவார்த்தத்தையும் வெளிப்படுத்தி விட்டது.

அது என்ன வெனில்:—

திரு காந்தியவர்கள் இந்தியாவில் இருந்து சீமைக்குப் புறப்படும் விஷயத்தில் அவரது அபிப்பிராயத்தை கேட்ட போது "இந்து முஸ்லீம் பிரச்சினை ஏதாவது ஒரு வழியாய் முடிவு பெற்றாலொழிய நான் சீமைக்குப் போவதில்லை" என்று சொன்னதானது யாவருக்குந் தெரிந்ததேயாகும்.

ஆனால், உப்புப்போரானது பிராண அவஸ்தையில் இருந்து சிலேத்துமம் இழுத்துக்கொண்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சமயத்தில் ஏதாவதொரு வகையில் "உடும்பு வேண்டாம் கையைவிட்டால் போதும்" என்கின்ற கவலையின் பேரில் லார்ட் இர்வினிடம் சென்று ராஜி பேசவேண்டியிருந்ததால் உப்புபோர் சம்பந்தமாய் "சிறை பிடித்தவர்களை விடுதலை செய்து அடக்குமுறையை நிறுத்திவிட்டால் உப்புப்போரை நிறுத்தி விடுவதோடல்லாமல் நான் சீமைக்கும் போகத் தயாராய் இருக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்ததை நிறைவேற்றாமலிருக்க முடியாத மாதிரியில் திரு. காந்தியை லார்ட் இர்வின் வைத்துவிட்டுப் போய்விட்டதாலும், லார்ட் வில்லிங்டன் திரு. காந்தியவர்களை 'போகிறீரா? என்ன சொல்லுகிறீர்? இர்வின் பிரபு உப்புப் போரை அழிக்கவிட்ட பாணம் இதோ இருக்கின்றது" என்று காட்டி மிரட்டியதினாலும் திரு. காந்திக்கும் அவரது சிஷ்யர்களுக்கும் சீமைக்குப்போக இஷ்டமே இல்லாமல் இருந்தும் "கடவுள்" அவர்களது கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோய் வட்டமேஜை மகாநாட்டில் உட்கார வைத்துவிட்டார்.

இந்த நிலைமையில் என்ன செய்வார்பாவம்!! "கடவுளை" நோகவோ முடியவில்லை, தத்துவார்த்தங்களும் வில்லிங்டன் பிரபுவிடம் செல்லவில்லை. வேண்டுமானால் அஹிம்சையைப்பற்றி பேசுவதில் மகாத்மாவாகலாம், கிறிஸ்துவாகலாம், உலகசிரேஷ்டராகவும் ஆகலாம். அதுவும் இவையெல்லாம் மாநிடத்திலாகலாம் என்றால் திரு காந்தியவர்களை விட அதிகமான "கடவுள் பக்தர்களான" பாதிரிமார்களிடத்தில் ஆகலாம். தன் பேரில் சாமி வந்தது என்று சொல்லிக்கொண்டு பெருமை அடைகின்ற "வீர"ப்பெண் மணிகளைப் போல் "எங்கள் வீட்டிற்கு காந்தி வந்தார்" என்று சொல்லிப் பெருமையடையும் பெண்மணிகளிடம் ஆகலாம். ஆனால், "கடவுளோடு" போட்டி போட்டுக்கொண்டு உலகத்தில் பெரும்பாகத்தை ஆக்ஷிபுரியும் வெள்ளைக்கார அரசாங்கத்தினிடம் இந்த கடவுள் பக்தியும், அஹிம்சை பல்லவியும் எப்படிச் செல்லமுடியும்? அதனாலேயே ராம்சேமக்டானல்ட் அவர்கள் தைரியமாய் எழுந்து "திரு. காந்தியவர்களே! உம்முடைய தோல்விக்காக நீர் வெட்கப்படாதீர்கள். சட்டமறுப்புப் பூச்சாண்டியானது யெல்லாக்காரியத்தையும் சாதித்துவிடாது. பேசுங்கள், நாணயமாய் உண்மையை நடந்து கொள்ளுங்கள், நான் சொல்லுகின்றபடி கேளுங்கள்" என்று பொருள்பட அழுத்தமாய்ச் சொல்லிவிட்டார். திரு. மக்டானல்ட் துரை இப்படிச்சொல்லிவிட்டதால் திரு. காந்தி பெயரைச்சொல்லி வயிறு வளர்த்து வந்தவர்களுக்கும் அவரால் மனிதருகலாம என்று நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கும் அவர் விக்கிரகத்தை வைத்து பூஜை, உற்சவம் செய்து ஜீவிக்கலாம் என்று இருந்தவர்களுக்கும் இது சற்று அவமானமாகக் காணப்படலாம். ஆனால், யார்தான் என்ன செய்யமுடியும்? முலாம் பூசின கள்ள நாணயம் எத்தனை நாளைக்கு செலாவணியாகக்கூடும்? பூச்சுத்தேயத்தேய உண்மை சொரூபம் வெளியாகித்தானே தீரும்? இதை கருமத்தின்பயன் என்றாலும் சரி, சைடன்ஸ் என்றாலும் சரி அதற்காக நாம் சண்டைக்கு வரவில்லை.

நிற்க, திரு. காந்தியவர்கள் "நமக்குள் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போனோம்" என்பதற்கு காரணம் சர்க்காரார் பேரிலேயே பழிகூறியதோடு நில்லாமல், மற்றும் ஒரு அடி முன் சென்று "இந்தியாவில் இருந்து சர்க்காரால் வரவழைக்கப்பட்ட பிரதிநிதிகள் சரியான பிரதிநிதிகள் அல்ல" வென்றும் "நமக்குள் நாம் ஒரு முடிவுபெறாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவே சர்க்காரார் பிரதிநிதிகளல்லாதவர்களாகப் பார்த்து பொறுக்கி எடுத்து அனுப்பி இருக்கின்றார்கள்" என்றும் ஒரு அபாண்டமான குறைகூறி யிருப்பதன் மூலம் சர்க்காராரை மாத்திரம் குற்றம் சொல்வதல்லாமல் இந்தியாவில் இருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளையும் இழிவுபடுத்திப் பேசி இருக்கிறார். இப்படிப்பேசியதானது அவர் இதுவரை பேசிவந்த—செய்துவந்த அக்கிரமங்களிலெல்லாம் இது ஒரு பெரிய அக்கிரமமான பேச்சென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. இப்போது சீமைக்கு சென்று இருக்கும் பிரதிநிதிகளில் திரு. காந்தியவர்களின் பிரதிநிதித்துவ யோக்கியதைக்கு குறைந்த பிரதி நிதித்துவ யோக்கியதை உடைய பிரதிநிதிகள் யாரும் இல்லை என்றே சொல்லுவோம். ஒருசமயம் மற்றகாரியங்களில் அவரவர்களின் சொந்த விஷயத்தில் யார்யார் எப்படி எப்படி நடந்துகொள்ளுகின்றவர்களாயிருந்தாலும், அவரவர்கள் மதத்திற்கும், அவரவர்கள் ஜாதிக்கும், அவரவர்கள் வகுப்புக்கும் திரு காந்திக்கு உண்டான பொறுப்புக்கு குறையாத பிரதிநிதிகள் என்றே சொல்லுவோம். திரு காந்தியவர்களுக்கு இந்து மதத்தைக் காப்பாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ பார்ப்பனீயத்தையும முதலாளித்தன்மையையும் காபபாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ அவ்வளவு அக்கரை தங்கள் தங்கள் மதத்தைக்காப்பதிலும முஸ்லீம் கிறிஸ்துவ பிரதிநிதிகளுக்கு முண்டென்பதை திரு. காந்தி அறிவாராக.

திரு. மாளவியாவுக்குப் பார்ப்பனியத்தைக காப்பாற்ற எவ்வளவு அக்கரை உண்டோ, அது போலவே பாாப்பனீயத்தை ஒழித்து மனிதத்தன்மையைபபெற திரு. அம்பெட்காருக்கும், திரு. சீனிவாசனுக்கும அககரைஉணடு என்பதைத் திரு. காநதி உணர்வாராக.

இபபடியிருக்கும் நிலைமையில் வட்டமேஜைப்பிரதிநிதிகள சரியானவாகள் அல்லஎன்றும், கலகக்காரர்கள் என்றும் திரு. காந்தி அவர்கள் சொல்லுவதெனறால் அது குறும்புத்தனமானது என்று சொல்லுவதைவிட வேறு ஒன்றும் சொலல முடியவில்லை.

இந்தியாவில் வகுப்பு சம்பந்தமான பேச்சுகளும தீர்மானங்களும் வரும்போதெல்லாம் அவைகளைக் கொண்டு வருபவர்களை "வகுப்பு வாதிகள்" என்றும "தேசியத்திறகு விரோதிகள்" என்றும் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், சிஷ்யர்களும் பேசி மற்றவர்களை வாயடக்கி வெற்றிகொண்ட தநதிரத்தையும, சூழ்ச்சியையுமே சீமைககுப் போய் அஙகும காட்ட வேண்டியதாய் விட்டது.

திரு.காந்திக்கு "வகுப்புவாதம்

கூடாது, மத வாதம் கூடாது" என்றும், "காங்கிரசு தான் பிரதானமானது" என்றும் கருதி அந்தப் படியே உண்மையான எண்ணம் இருந்திருக்குமானால் திருவாளர்கள். மாளவியா, மூஞ்சே, சரோஜினி, ஏ. ரங்கசாமி அய்யங்கார் ஆகிய ஜாதி மத வகுப்பு வாதிகளைப் பார்த்து "மகாநாட்டில் உங்களுக்கு வேலை என்ன? நீங்கள் எதற்காக இங்கு இருக்கிறீர்கள்?" என்று கேட்டு இருக்க வேண்டாமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

மாளவியாவுக்குஇடமிருக்கும் மகாநாட்டில் அம்பெட்காருக்கு இடமிருப்பது தகுதி அற்றதென்றோ, மூஞ்சேயிக்கு இடமிருக்கும் மகாநாட்டில்ஷௌகத் அலிக்கு இடமிருப்பது தகுதி அற்றதென்றோ ரங்கசாமி அய்யங்காருக்கு இடமிருக்கும் மகாநாட்டில் சீனிவாசனுக்கு இடமிருப்பது தகுதி அற்றதென்றோ யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம்.

வகுப்புக் கமிட்டியில் வகுப்புப் பிரதிநிதிகள் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தோல்வியுற்றதற்கு காரணம் வகுப்பு சம்பந்தமான அபிப்பிராயங்களின் பலனென்றோ, அல்லது பிரதிநிதிகள் ஒருவரால் ஒருவர் ஏய்க்கப்பட முடியாத சமஜோடியான வீரர்கள் என்றோ சொல்லப்படுமானால் அது மனிதத் தன்மையின்மேன்மையான குணமாகும். அப்படிக்கு இல்லாமல் ஒரு பக்கத்துப் பிரதிநிதிகள் யோக்கியர்கள் என்றும், மற்றொரு பக்கத்துப் பிரதிநிதிகள் அயோக்கியர்கள் என்றும் சொல்லுவது ஒரு விதத்திலும் யோக்கியமான பேச்சாகாதென்பதோடு, இது ஒரு கோழைத்தனமான சமாதானம் என்றும் சொல்லுவோம். ஆகவே இதைப் பார்க்கும் போது திரு. ராமசே மாகடனால்ட் துரை திரு. காந்தியைப்பார்த்து "நாணயமாய் நடந்து கொள்ளுங்கள். உண்மையை மறைக்க முயற்சிக்காதீர்கள். உங்களுக்குள் பைசல் செய்து கொள்ள சக்தியில்லாவிட்டால் எங்கள் மீது குறை கூறாதீர்கள்." என்று சொன்னதோடு "இந்தியாவில் இல்லாத ஜாதிமத வகுப்புகளின் பிரதிநிதிகள் இங்கு யாராவது தருவிக்கப்பட்டிருக்கின்றார்களா?" என்றும் கேட்டிருப்பதானது மிக மிகப்பொருத்தமான பேச்சென்றே கருதுகின்றோம். இவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த திரு. காந்தியவர்கள் தன் தலையை தொங்கப் போட்டிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் போனதே இதற்குச் சரியான உதாரணமாகும். தவிர திருவாளர்கள் மாளவியா, மூஞ்சே, சரோஜனி, ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் "காங்கிரசு பிரதிநிதிகளேயொழிய வகுப்புப் பிரதிநிதிகள் அல்ல" என்று சொல்லக் கூடுமானால் திருவாளர் காந்தி "என்னை ஒருவரை மாத்திரம் தான் காங்கிரசு பிரதிநிதியாய் அனுப்பிற்று" என்று எப்படி சொல்லிக் கொள்ள முடியும்? என்று கேட்கின்றோம். அன்றியும் திரு. காந்தி இருக்கும் போது இவர்கள் எல்லாம் எதற்காக வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்? அங்கு இவர்கள் பேசியது எதன் சார்பாக? எதற்கு பிரதிநிதித்துவமாக? என்கின்ற விஷயங்களை கவனித்துப் பார்த்தால் இதன் சூக்ஷி யாருக்கும் விளங்காமல் போகாது.

அன்றியும் "இந்தியாவுக்கு பிரதிநிதி ஸ்தாபனம் காங்கிரசு ஒன்றேதான்", என்றும் "காங்கிரசுக்கு பிரதிநிதி திரு. காந்தி ஒருவரே தான்" என்றும் சொல்லுவதை காங்கிரசும் திரு. காந்தியுமாவது ஒப்புக் கொண்டிருப்பவர்களாயிருந்தால் வட்டமேஜை மகாநாட்டுக்கு மற்றும் சுமார் 10, 20 ஸ்தாபனங்களிலிருந்து 50, 60 பிரதிநிதிகளை சர்க்கார் தெரிந்தெடுத்திருப்பதையும், அவர்கள் ஏற்கனவே சீமைக்கு ஒரு தரம் சென்று வந்திருப்பதையும் தெரிந்து கொண்டபின்பும் அந்தபிரதிநிதித்துவங்களை கேன்சல் செய்யாமல் காங்கிரசும் திரு. காந்தியும் ஏன் தங்கள் பிரதிநிதித்துவங்களை ஒப்புக் கொண்டு அங்கு சென்று இருக்க வேண்டும்? என்றும் கேட்கின்றோம். திரு. காந்தியவர்கள் தன்னோடுகூடவே திரு. மாளவியாவை அழைத்துச் சென்றார் என்பதையும் திரு. மாளவியாவை பிரதிநிதியாய் தேர்ந்தெடுக்க திரு. காந்தியவர்கள் முயற்சியும் உண்டு என்பதையும் யாராவது மறுக்க முடியுமா? அது மாத்திரமல்லாமல் முஸ்லீம் சமூகத்திற்கு டாக்டர் அன்சாரி அவர்களை தெரிந்தெடுக்க திரு. காந்தியவர்கள் எவ்வளவோ பாடுபட்டும் முடியாமல் போனதால் அவர் பிரதிநிதியாய் வரவில்லையே என்று திரு. காந்தி வருத்தப் பட்டுக் கொண்டிருப்பதும் யாராவது மறுக்க முடியுமா?

இந்தநிலைமையில்வட்டமேஜை மகாநாட்டை வகுப்பு மகாநாடாக்குவதற்கு திரு. காந்தியவர்களும் ஒரு பங்குக்காரர்தானா? அல்லவா? என்று கேட்கின்றோம். அன்றியும் திரு காந்தியவர்கள் சரியாகவோ தப்பாகவோ தனது வாக்கினாலேயே, எப்பொழுது முகமதியர்களுக்கும் சீக்கியர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம தனித்தேர்தல் தொகுதி மூலம் கொடுக்கின்றேனென்றும், அதுவும் அதை காங்கிரசே அனுமதித்திருக்கின்றது என்றும் ஒப்புக் கொண்டாரோ அப்பொழுதே காங்கிரசும் காந்தியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமில்லையென்பது முடிவு பெற்று விட்டது; அன்றியும் இந்த வகுப்புவாரி உரிமைஇன்று நேற்றல்லாமல் சுமார் 20, 30 வருஷ காலமாகவே காங்கிரசில் இருந்தும் வருகின்றது. ஆகவே இருபது வருஷத்திற்கு முன்னாலேயே காங்கிரசு ஒப்புக் கொண்ட விஷயத்தைப் பற்றி இன்று புது விஷயம் போல் பேசுவதானது ஒரு சூட்சியேஒழியவேறு என்ன நாணயம் அதில் இருக்கக் கூடும்? என்று தைரியமாய் கேட்கின்றோம்.

தவிர இப்போது வகுப்புத்தகராறு என்பது முஸ்லீம்கள் விஷயத்திலும், சீக்கியர்கள் விஷயத்திலும் இருந்து வருவதைப்பற்றி நாம் பேச வரவில்லை. ஆனால் தீண்டாதார் என்று ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கும் 7 கோடி மக்களுக்கு வரப் போகும் சுயராஜியத்தில் என்னவிமோச்சனம் செய்யப் பட்டிருக்கின்றது? என்றுதான் கேட்கின்றோம்.

திரு. காந்தியவர்களும் தீண்டாதாருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் அதை தான் ஒரு போதும் ஆட்சேபிக்கவில்லையென்றும் ஒப்புக் கொள்ளுகின்றார். அப்படி இருக்க வகுப்புவாதம் குறுக்கிட்டு திரு. காந்தியின் தேசியத்தை எவ்விதத்திலும் கெடுத்து விடவில்லை. ஆனால் தீண்டப் படாதாருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதில் திரு. காந்தியோ, காங்கிரசோ சூட்சியும் ஏமாற்றுந்தன்மையும் இல்லாமல் உண்மையாய் நடந்து கொள்ளுகின்றவர்களாயிருந்தால் முகமதியர்களைப் போலவும், சீக்கியர்களைப் போலவும் பிரதிநிதித்துவம் அடையும்படி தாராளமாய் ஏன் விட்டு விடக் கூடாது? அப்படிக்கில்லாமல் "நீயும் வீட்டுக்குள் வரலாம். உனக்கும் இடம் ஒதுக்கி வைத்திருக்கின்றது. ஆனால் வெளிக்கதவை மாத்திரம் தாராளமாய் திறந்து விடும்படி கேட்காதே" என்று சொல்லுவதானால் அது நாணயமானதா? என்று யோசித்துப்பாருங்கள்.

விஷயங்கள் இப்படியெல்லாம் இருக்க வட்டமேஜை மகாநாட்டை சர்க்கார் கெடுத்துவிட்டார்கள் என்று சொல்லுவதில் பயன் என்ன? திரு காந்தியவர்கள் தனது ஆத்மசக்தியாலும், அஹிம்சா தர்மத்தாலும், கடவுள் கருணையாலும் எந்த விதமான சுதந்திரம் பெற்று வந்தாலும் அதை இந்தியாவில் கொண்டு வந்துதான் செலாவணியாக்க வேண்டுமேயொழிய மற்றபடி வேறு எந்த நாட்டிற்கும் கொண்டுபோய்விடமுடியாது. இந்தியாவில் இருக்கும வகுப்பு, மத, ஜாதிகளை மறைந்து போகும்படியாகவும் எதையும் கொண்டுவந்துவிடமுடியாது. ஏனெனில் எல்லாமத வகுப்பு ஜாதிகளையும் காப்பாற்றுவதாக வாக்கு கொடுத்துவிட்டே சீமைக்கு கப்பலேறி இருக்கிறார் இந்நிலைமையில் அந்த சுதந்திரத்தில் ஒவ்வொரு மதமும், ஒவ்வொரு வகுப்பும், ஒவ்வொரு ஜாதியும் பங்கு கேட்பதில் மாத்திரம் என்ன கெடுதி இருப்பதாக திரு காந்தி சொல்ல முடியும்? ஒவ்வொரு ஜாதியும் வகுப்பும், மதமும், சிறுசிறுகூட்டமாயிருக்குமானால் ஒருசமயம் அவர்களை ஏமாற்றிவிடுவது சாத்தியமாக இருக்கலாம். அப்படிக்கில்லாமல் 8 கோடி முஸ்லீம்கள், 7 கோடி தீண்டாதார், முக்கால் கோடி கிறிஸ்துவர், 3 கோடி பார்ப்பனர், 14 கோடி பார்ப்பனரல்லாதார் மற்றும் கால் கோடி அரைக்கோடி, ஒரு கோடி, இரண்டு கோடி, என்பதான சில்லரை மதங்களும், சில்லரை ஜாதிகளும், உள்வகுப்புகளும் எத்தனையோ இருக்கும்போது இவர்கள் இத்தனை பேர்களின் கண்களிலும்மிளகாய் பொடிபோட்டு எப்படி ஏய்க்க முடியும்? என்பதை யோசித்துப்பாருங்கள். ஏதோ தந்திரத்தாலோ, ஏதோ கைபலத்தாலோ, ஏதோ மூடநம்பிக்கையாலோ ஒரு காலத்தில் ஒரு சமூகமோ, வகுப்போ, ஜாதியோ, மதமோ, உச்சஸ்தானமும், அதிகாரமும, ஆக்ஷியும், பணமும், படிப்பும் பெற்றுவிட்டால் அவைகள் அப்படியே அவர்களுக்கு எப்போதும் நிலைத்திருக்கு படியாகவும், கீழ்மக்களாக, அடிமையாக, ஏழையாக, கூலியாக,

படிக்காத தற்குறிகளாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் எப்போதும் அதுபோலவே கீழ்மக்களாக, தற்குறிகளாக, கூலிகளாக, ஏழைகளாக, அடிமைகளாக, இருக்கும்படி செய்யமுயற்சிப்பதென்றால் அதை எப்படி சுதந்திரம் என்றும், சுயராஜியம் என்றும், சுயேச்சை என்றும், சமத்துவம் என்றும், சமதர்மம் என்றும், சொல்லமுடியும்? என்று கேட்கின்றோம். இம்மாதிரி விடுதலை முயற்சிக்கு பழைய சூழ்ச்சியையும், அயோக்கியத்தனத்தையும் நிலை நிறுத்தப்பாடுபடும் மற்றொரு புதிய சூழ்ச்சியும், அயோக்கியத்தனமும் என்று சொல்லாமல் வேறு என்ன பெயர் கொடுக்க முடியும்?

சாதாரணமாக இனி வரப்போகும் சுயராஜியமோ, சுயேச்சையோ எப்படிப்பட்டதாயினும் அதில் முதலில் பரிசோதிக்க வேண்டிய விஷயம் இரட்டமலை சீனிவாசப்பறைய வகுப்புக்கும், அப்பட்காரப்பறைய வகுப்புக்கும் என்ன விடுதலையோ, யோக்கியதையோ, மாறுதலோ, ஏற்படுமா என்று பார்ப்பதுதான் முக்கிய பரீக்ஷையாய் இருக்கவேண்டுமே அல்லாது ரங்கசாமி அய்யங்கார் பிராமணருக்கும், மாளவியா பிராமணருக்கும் இனியும் என்ன புதிய யோக்கியதை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டியதாய் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றோம்.

சாதாரணமாக இந்தியா பூராவுக்கும் உள்ள 36 கோடி மக்களில் 12ல் ஒரு பாகமாகிய 3-கோடி மக்கள் தொகுப்பாகிய பார்ப்பன ஜாதியாருக்கு அந்த வ[illegible]ப்பில் மாத்திரம் எத்தனை பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

சாதாரணமாக நமக்கு தெரிந்த அளவில் நமது மாகாணத்தில் இருந்துமாத்திரம் திருவாளர்கள் சீனிவாசசாஸ்திரி, சர். ராமசாமி அய்யர், ரங்கசாமி அய்யங்கார், ராமச்சந்திர ராவ், திருமதி ராதாபாய் அம்மாள், ராகவய்யா, முதலியவர்கள் சென்றிருக்கின்றார்கள். மற்ற 1 பங்குக்கு பிரதிநிதிகளாக திருவாளர்கள் ராமசாமி முதலியார், பாத்ரோ ஆகிய இருவர் மாத்திரம் இந்துக்கள் பார்ப்பனரல்லாதாருக்கும், திரு. பன்னீர் செல்வம் கிறிஸ்துவ வகுப்புக்கும், திரு. ஜமால் மகமது சாயபு மகமதியருக்கும் திரு இரட்டமலை சீனிவாசன் தீண்டாதாருக்கும் பிரதிநிதியாக சென்று இருக்கிறார்கள். ஆக ஒட்டு மொத்தம் 3 கோடி உள்ள சமூகத்திற்கு இந்த ஒரு மாகாணத்தில் இருந்தே, அதுவும் வகுப்பு வாதம் பேசும் மாகாணத்தில் இருந்தே பார்ப்பனர்களில் 6 பேர்களும் பாக்கி 33 கோடிக்கு 5 பேரும் சென்றிருக்கிறார்கள் என்றால் இனி வகுப்பு வாதத்தைப்பற்றி கவலையே இல்லாமல் இருப்பதாக சொல்லப்படும் மற்ற மாகாணங்களில் இருந்து எவ்வளவு மோசமாக பிரதிநிதித்துவங்கள் போயிருக்கும் என்பதை நாம எடுத்து காட்டவேண்டுமா? என்று கேட்கின்றோம்.

ஆகவே வட்டமேஜை மகாநாட்டில் "வகுப்பு வாதம் வந்து குறுக்கிடுகின்றது, குறுக்கிடுகின்றது" என்று கத்துவதெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் மேலும் மேலும் தாழ்த்தவும், ஒடுக்கவும் செய்யப்படும் சூழ்ச்சியை வெளியாக்குவதும், உயர்த்தப்பட்டு உச்சம் பெற்ற வகுப்புகளை மேலும் மேலும் உயர்த்தவும் செய்யப்படும் சூழ்ச்சியை வெளியாக்குவதும்தான் குறுக்கிடுவதாய் காணப்படுகின்றனவேயொழிய வேறில்லை. ஆகவே வட்டமேஜை மகாநாடு முறிந்தவரையில் கஷ்டப்படும் மக்களுக்கு லாபமேயொழிய நஷ்டமில்லை. வட்டமேஜைமகாநாடு வெற்றிபெற்ற வரையில் பார்ப்பனர்களுக்கும் பணக்காரர்களுக்கும்தான் லாபமேயொழிய வேறில்லை. ஆகையால் வட்டமேஜை மகாநாடு முறிந்துபோய்விட்டதே என்று யாவரும் கவலைபடவேண்டியதில்லை, கவலைப்படவேண்டியதில்லை.

ஈ. வெ. இராமசாமி உடல் நிலை.

சென்னை ராயபுரம் ஆஸ்பத்திரி பிரதம சர்ஜன் டாக்டர் மேஜர் மகாதேவர் அவர்கள் திரு இராமசாமி அவர்களை சென்ற ஒரு வார சிகிச்சைக்குப் பிறகு திரும்பவும் பரிசோதனை செய்தார். பிலட்பிரசர் என்னும் ரத்தஓட்டவேகம் 117 டிகிரியில் மிகக் குறைந்திருப்பதாலும் எரினியாவினால் (குடல் வாதத்தால்) குடலில் சில கோளாறுகளிருப்பதாலும்தான் மயக்கமும் வயிற்றுவலியும் அடிக்கடி எப்பொழுதும் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கின்றதென்று கண்டு இனியும் பத்து நாளைக்கு வேறுமருந்து சாப்பிடவேண்டுமென்று சொல்லி அந்தப்படி கொடுத்து வருகிறார். ரண சிகிட்சை (ஆபரேஷன்) அவசியமா? இல்லையா? என்பதைப்பற்றி பின்னால் அபிப்பிராயம் கூறுவதாகக் கூறியிருக்கின்றார் என்று தோழர் அ. பொன்னம்பலம் அறிவிக்கிறார்.

காந்தியின் சபதம்.

சீமையில் இந்திய மாணவர்கள் திரு காந்திக்கு ஒரு விருந்தளிக்கும்போது பேசுகையில் திரு காந்தி ஒரு சபதம் (பிரதிக்கினை) செய்துகொண்டார். அதாவது:-

"தீண்டாதார் பிரதிநிதிகள் கோரும் உரிமைகளை நான் என் உயிர் போகும் வரையில் எதிர்த்தே தீருவேன்."

"மகம்மதியர்களின் உரிமையையும், சிக்கியர்களின் உரிமையையும் சிலதவிர்க்கமுடியாத காரணங்களால் ஒப்புக்கொண்டு தீரவேண்டியதாயிற்று" என்று சொன்னார்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஜாதிகாரத்துவத்தை யாதொரு விதகேள்வியுமகேட்பாடுமின்றியுமங்கீகரிப்பதில்லை. காந்தியின் சித்தாந்தமாகிய சாத்வீகம் அல்லது பலாத்காரமின்மை யென்று கூறப்பட்ட கோட்பாட்டை அங்கீகரிக்கும் சிறுபான்மையான மக்களாகிய ஒரு பிரிவும், எந்தவகைய சித்தாந்தத்திலும் சிறிதும் நம்பிக்கையில்லாமலும் தற்கால அரசியல் உலகில் அனுசரிக்கப்பட்டும் கையாளப்பட்டும் வரும்படியான நீதியாகிய அதாவது ராஜதந்திர முறையிலான சேதுவான முறைகளைக் கையாளுவதென்னும் கொள்கையைக் கைபிடிக்கவேண்டுமென ஆசைப்படும் பெரும்பான்மையான மக்களடங்கிய ஒரு பிரிவாகவும் காங்கிரஸ் ஸ்தாபனமானது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. இவர்கள் சாத்வீகத்தை கைப்பற்றி அனுஷ்டிப்பதற்கு அக்கொள்கையில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை ஒருக்காலும் காரணமாகாது. ஆனால், அதை ஒரு தந்திரமாகவும், யுக்தியாகவுமே தான் அவர்கள் கருதுகின்றார்கள். சாத்வீகமே தங்களுடைய கொள்கையென கூறப்பட்டு வந்தபோதிலும் கூட, பயத்தை விளைவிப்பவர்களை காங்கிரசுக்கு எத்தகைய ஆதிசயச்செய்கைகள் புரிந்துகொண்டு வருகின்றார்களோ, அம்மாதிரியேதான் காங்கிரசும் அவர்களுக்குப் புரிந்துகொண்டு வருகின்றது.

இத்தகைய பிரிவுகளுள்ள ஸ்தாபனத்தின் பிரதிநிதியாகத்தான் திரு. காந்தி அவர்கள் விளங்குகின்றார். இந்தியா முழுவதுக்கும், பொதுவாக, தான் ஒருவரே ஏகப்பிரதிநிதியெனவும், சிறப்பாக "ஒதுக்கப்பட்ட சமூகத்தினர்கள்" என்று அவரால் கூறப்பட்ட மக்களின் பிரதிநிதி தான் எனவும் அவரால் சென்ற வாரத்தில் பகிரங்கமாகக் கூறப்பட்டு வந்த கூற்றானது, அவ்வகுப்பினரால் தங்களுடைய உண்மைப் பிரதிநிதிகளென அங்கீகரிக்கப்பட்டவர்களாலும், ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாலும் வெளிப்படையாக மறுத்துக்கூறப்பட்டது. கவர்ன்மெண்டாரால், உண்மையாகவே நியமிக்கப்படும் ஒரு கமிட்டியாரின் தீர்மானத்திற்கு ஹிந்து--முஸ்லீம் பிரச்னையைப்பற்றி விவகாரத்தையும் ஏனைய இதர விஷயங்களின் முடிவையும் விட்டுவிடுவதாகக்கருதியேதான் திரு காந்தி அவர்கள் வட்டமேஜை மகாநாட்டையனுசரித்த சிறுபான்மை கமிட்டியாரின் கூட்டத்தை காலவரம்பின்றி ஒத்திப்போட்டுவிடவேண்டுமென உத்தரைத்தார். ஆனால், அதே கமிட்டியிலுள்ள அவருடைய பெரும்பான்மையான சகாக்களும் வட்டமேஜை மகாநாட்டின் பிரதிநிதிகளும் அவருடைய அந்த ஆலோசனையை ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். திரு. காந்தியாவது, அல்லது அவருடைய காங்கிரஸாவது, அகில இந்திய மக்களின் சார்பாகப் பேசுவதற்கு யாதொருவித உரிமையும் நியாயமாகவே கிடையாதென இதனால் தெளிவாக ஏற்பட்டுவிட்டது.

மகாநாடும், அமைப்பும்.

வட்டமேஜை மகாநாட்டினால் நமக்கு 'ஒரு திருப்தியான நிருமாணம்'' ஏற்படாதென்பது நாளாக நாளாகத் தெரிந்துகொண்டே வருகின்றது. இந்த நிருமாண அமைப்பின் வேலையைப்பொறுத்தவரையிலும் அபஜெயத்தானேற்படுமென்று முன்னமேயே விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் விஷயத்தில் தீர்ப்புக்கூறுவதற்குத் தங்களுக்குத்தான் உரிமையுண்டெனக்கூறப்பட்டு வரும் கூற்றானது--கொள்கையிலும், வார்த்தையிலும் எவ்வளவுதான் அழகாயிருந்தபோதிலும்கூட, அம்மாதிரியே அனுபவத்திலும், அனுஷ்டானத்திலும் அபிவிருத்திசெய்யப்படுவது சாத்தியமாகவே யாகாது யென்பதை உலக மக்களுக்கு நிரூபிக்கப்படுவதற்குத்தான் இந்தமகாநாட்டின்முடிவானது பயன்படக்கூடும். இந்திய சட்டசபையில் சுயராஜ்ய கட்சிகளின் தலைவராய் விளங்கிய திரு. பண்டிட் மோதிலால் நேருஅவர்கள் இக்காரணத்தாலேயே தான் இந்தியநிருமாணத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகவேண்டி ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டவேண்டியதுமிக்க அவசியமென வற்புறுத்திக் கொண்டு வந்தார். கடைசியாக, கவர்ன்மெண்டாரும் இதைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு ஒத்துக்கொண்டார்கள். அவ்வாறே ஒரு வட்டமேஜை மகாநாடும் கூட்டினார்கள். இம்மகாநாட்டிற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்த முறைகளைப் பற்றி முறையிடுவதானது-அதாவது புகார் சொல்லுவதானது சுத்தப் பைத்தியக்காரத் தனமேயாகும்.

இம்மகாநாட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரதிநிதிகள் யாவரும் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டவர்களே யல்லாமல், மற்றபடி பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக மாட்டார்களென திரு. காந்தி அவர்கள் கூறுகிறார். ஆனால், இப்பிரதிநிதிகள் யாவரையும் தெரிந்தெடுப்பவர்கள் யார்? சர் மகமது ஷாபி அவர்கள் விளக்கமாக எடுத்துக் காண்பித்தது போல, மகாநாட்டில் தற்காலம் அங்கம் வகிப்பவர்கள் யாவரும் சர்க்காராலேயே நியமனம் செய்விக்கப்பட்டவர்களாகவே யிருந்த போதிலும் கூட, இந்தியாவிலுள்ள பல்வேறு வகுப்பினர்களின் பிரதிநிதிகளும், கூடுமானவரை அரசியல் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுமேதானவார்கள். ஒவ்வொரு அரசியல் ஸ்தாபனத்திற்கும், ஒவ்வொரு வகுப்பினருக்கும் இவ்வித நியமனத்தால் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுத்தானிருக்கின்றது. மேலும், இவர்கள் யாவரும் அவரவர்களுடைய ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்களால் பெரிதும் அடிக்கடித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே யாவார்கள். இந்தியாவிலுள்ள யாவராலும் பொதுவாகவே விரும்பப் படக்கூடிய ஓர் திட்டத்தை வகுக்க இம்மகாநாடு தவறி விடுமேயானால், அப்பொழுது திரு. காந்தி அவர்கள் ஒத்துக் கொள்வது போல "அந்நிலைமையை யடையக் கூடிய காலம் இன்னு மேற்படவில்லை." யென்பது தான் நிரூபிக்கப் பட்டதாகும்.

ஒப்புக்கொள்வதின் முக்கியாம்சம்

இந்திய அரசாங்க ஆட்சியும், அதன் சம்பந்தப்பட்ட நிர்வாகமும் ஆங்கிலேயமந்திரிகளினிடமிருந்தும் பார்லிமெண்டினிடமிருந்தும் இந்திய மந்திரிகளினிடமும், இந்தியப் பார்லிமெண்டினிடமும் உடனே மாற்றப்பட வேண்டுமென கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் காங்கிரசின் சர்வாதிகாரியால் இம்மாதிரியாகக் கூறப்பட்டிருப்பதானது மிகவும்கம்பீரமாகவும், பரிகாசத்திற்கிடமில்லாமலும் ஒப்புக்கொள்ளவேண்டியதேயாகும். ஓர் உண்மையான தேசிய அரசாங்கத்தை தற்கால இந்தியாவில் ஸ்தாபிப்பதற்கான சாதனங்களிப்பொழுது இல்லவேயில்லை. திரு காந்தி அவர்களால் இம்மாதிரியாக ஒப்புக்கொள்ளப்பட்டதின் உண்மை தாத்பரியமிதுவேயாகும். நமது கண்களுக்கு முன்பாக, உண்மையாகவே, ஒரு நவீன இந்திய தேசத்தார் எனக்கூறப்படும்படியான நிலைமை அதிதுரிதமாகவே உண்டாகிக்கொண்டு வந்த போதிலுங்கூட, இந்தியாவிலிருப்பவர்கள் யாவரும் ஒரே ஜாதியார் தான் எனக்கூறப்படும்படியான நிலைமை இன்னுமேற்பட்டுவிடவேயில்லை. இப்பிரத்தியக்ஷமானதும், பகிரங்கமானதுமான உண்மையை காங்கிரசின் தலைவர்களும், அதன் ரிஷி போன்ற சர்வாதிகாரியும் எத்தகைய கபடமின்றியும், ஒளியாமலும் ஒத்துக்கொள்ளசமமதிப்பார்களேயானால் தற்காலம் நடைபெற்றுவரும் குழப்பங்களையும், நமது அரசியல் துறையிலும், பொதுவாழ்க்கையிலும் ஏற்படக்கூடிய வீண்விவாதங்களையும், வாக்குவாதங்களையும் சுலபமாகவே நாம் நீக்கிவிடலாம்.

வட்டமேஜை மகாநாடானது நமக்குச் சுதந்திரத்தையளித்துவிடாது. மேலும் அது நமக்கு சுயஆக்ஷிசெலுத்தும்படியான குடியேற்ற நாட்டந்தஸ்தையும் கூட அளிக்காது. நாம் பொய்யாக நினைத்துக்கொண்டிருப்பவைகளையும், நமது நம்பிக்கைத் துரோகமான கூக்குரல்களையுந்தான் அது வெளிப்படுத்தும். மகாநாடானது உண்மையாகவே இதைத்தான் செய்து கொண்டும் வருகின்றது. அம்மகாநாட்டின் நடவடிக்கைகள் யாவும் முடிவடைந்தபிறகு, எல்லா மக்களும் யாதொரு வித்தியாசங்களுமின்றி சமமான சுதந்திரத்தையும் உரிமையையுமனுஷ்டிக்கும் படியான நிருமாண திட்டங்கள் அதாவது குடிஅரசு யேற்பட்டுவிடவே விடாது. ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்டதும், பிரஜாப் பிரபுத்துவம் வாய்ந்ததுமான--அதாவது குடிஅரசு நாடாகவுமிருக்கக்கூடிய நிலைமையை யடைவதற்கு சாத்தியமான வழியில், உண்மையும், சௌரமும் வாய்ந்தஇராஜீயஇந்தியநிபுணர்களும், இராஜீயஆங்கிலேயநிபுணர்களுமொன்றுகச்சேர்ந்து, ஒத்துமையடைந்து, ஐக்கியப்பட்டு செல்லுவதற்கான ஓர் புதிய உபாயம் ஆரம்பம் செய்யப்படுமென்பதை மட்டும் நாம் உண்மையாகவே எதிர்பார்க்கலாம். திரு. காந்தி அவர்கள் தம்முடைய வலது கரத்திலாவது, அல்லது இடது கரத்திலாவது சுயராஜியத்துடன் திரும்பி வந்துவிடமுடியாது. ஆனால், சென்ற சில ஆண்டுகளாக திரு. காந்தி அவர்களிருந்துகொண்டு வந்ததுபோலவே இப்பொழுது மிராமலும், ஸ்திரமான புத்தியுடன் கூடிய ஓர் அரசியல்வாதியாகவுமிருக்கும்படியான நிலைமை வட்டமேஜையின் அனுபோகங்களால் அவருக்கு ஏற்படலாமென கருதுகின்றோம். (ஜஸ்டிஸ்.)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

குதி வேண்டியதில்லை என்ற காந்தியின் கொள்கையை மிக வன்மையாய்க் கண்டிப்பதுடன், அவரிடம் எங்கட்கு நம்பிக்கையில்லை என்றும், டாக்டர் அம்பெத்காரும், ரெட்டைமலை, சீனிவாசன் அவர்களும் கொண்டுள்ள கொள்கையை முழுமனத்தோடு ஆதரிக்கின்றோம்" என்பதாகும்.

இத்தீர்மானத்தை திரு.காந்தி, திரு அம்பெத்கார், திரு ரெட்டைமலை, சீனிவாசம், பிரதம மந்திரி மாக்டனால்டு முதலியவர்கட்கு அனுப்புவதென்றும் தீர்மானித்தது. இச்சமயத்தில் சில பார்ப்பனர்கள் "காந்திக்கு ஜே! வந்தேமாதரம்!! எல்லோரும் வீட்டுக்குப்போவோம் வாருங்க"ளென்று கூச்சலிட்டுக்கூட்டத்தில் குழப்பம் விளைவித்தார்கள். அதுபோது அவர்கட்குப் பக்கத்திலிருந்தவர்கள் சரியான உதை கொடுத்தார்கள். உதைக்குப் பின் புத்தி மதி பெற்றார்கள். பின் தலைவரவர்கள் முடிவுரை கூறினர் கூட்டம் இரவு 8-30 மணிக்கு முடிந்தது

இரண்டாவது கூட்டம்.

சென்ற 16-10-31 புதன் கிழமை மாலை 5-30 மணிக்கு சென்னை நேப்பியர் பார்க்கில் ராவ்சாகிப் திரு. வி தருமலிங்கம் பிள்ளை எம். எல். ஸி. அவர்கள் முயற்சியில் இப் பொதுக் கூட்டம் கூட்டப் பெற்றது. 3000க்கு மேல்பெருந் திரளான மக்கள் மிக்க ஆர்வத்தோடு வந்திருந்தார்கள். இக்கூட்டத்திற்கு திரு என் சிவராஜ் பி. ஏ. பி. எல். எம். எல். ஸி. அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையாக திரு. காந்தியின் செயலைக் கண்டித்தும், டாக்டர் அம்பெத்கார் சீனிவாசம் இவர்களை ஆதரித்தும், வட்டமேஜை மகாநாட்டில் தங்கள் சமூகத்தாருக்கும் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். பின் தோழர்கள் பொன்னு, அ பொன்னம்பலம், சி.தங்கராஜ், செல்வராஜ், வி. பி. எஸ் மணியர், பாலகுருசிவம் ஆகியவர்கள் பேசினார்கள். பின் தலைவரவர்களால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் படிக்கப்பட்டு தோழர்கள் வி. பி. எஸ்' மணியர், பாலகுருசிவம் இவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள் வருமாறு:—

1. லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் திரு. காந்தி அவர்கள் தாழ்த்தப் பட்டவர்கட்கு தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுவதில்லை என்று மறுத்து "காங்கிரஸ்" அவர்கட்கு வேண்டுவதைச் செய்து விடும் என்று கூறி நம்பிரதிநிதி டாக்டர் அம்பெத்காரவர்களை நம் பிரதிநிதியல்ல என்று கூறிய செயலை இங்கு கூடியுள்ள நாம் மிக வன்மையாய்க் கண்டிக்கின்றோம்.

2. வட்டமேஜை மகநாட்டில் மற்ற சமூகங்கட்கெல்லாம் (முகமதியர் சீக்கியர்) தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதித்திருப்பதே போல், எங்கள் சமூகத்திற்கும் எங்கள் பிரதிநிதிகளான டாக்டர் அம்பெத்கார், சீனிவாசம் ஆகியவர்களிடம் நன்கு எங்கள் நிலைமைகளை விசாரித்து எங்கட்கு தந்திமூலம் அறிவிக்க வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கின்றது.

3. இத்தீர்மானங்களை திரு காந்தி, திரு.மாக்டொனால்டு, டாக்டர் அம்பெத்கார், சீனிவாசம் ஆகியவர்கட்கு தந்தி மூலம் அறிவிக்க வேண்டுமென்று இன்றைய கூட்டத்தலைவர் திரு. என் சிவராஜ் பி.ஏ, பி.எல்.எம். எல்.ஸி. அவர்களை கேட்டுக்கொள்வதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இம்மூன்று தீர்மானங்களையும் ஆதரித்துபேசும்போது தோழர்கள் பேசியதாவது:—

இனி நாம் உறங்கக்கூடாது. காந்தியாவது, கடவுளாவது நமக்கு உதவிசெய்வாரென்று நம்பினால் ஏமாற்றப்படுவோம். இதுவரை காந்தியாவது காங்கிரசாவது அம்பட்டன் கடையிலும், காப்பிகிளப்பிலும், கிணறுகளிலும், நதிகளிலும், கோவில்களிலும், பொதுஸ்தாபனங்களிலும் பிரவேசிக்காமல் தடுக்கப்பட்டு இழிவு படுத்துவதைப்பற்றி ஏதாகிலும் செய்யமுடிந்ததா? மனித சமூகத்தில் 7 கோடி மக்கள் கஷ்டப்படுவது பணக்காரர்கட்கும் உயர்ந்த ஜாதிக்காரர்கட்கும் எப்படி தெரியும்? நாம் நம்மை அர்த்தமில்லாமலே ஹிந்து என்று கூறிக்கொள்வதை முதலில் ஒழிக்கவேண்டும். நாம் ஹிந்துவாக இனி இருக்கமுடியாது. எப்போதும் இருக்கமுடியாது. ஏன்? இதுவரையிருந்து பார்த்துவிட்டோம். இனி நாமும் 8கோடி முகம்மதியர்களோடு 7 கோடி பேரும் கூடி 15 கோடி மக்களானால் நாம் அப்போது இந்துக்களைப்பார்த்து "உங்கட்கு தனித்தொகுதிவேண்டாம்—சுயராஜியமும் வேண்டாம், எல்லாம் எங்கள் முகமதிய சமூகம் உங்களைக் காப்பாற்றும் என்று கூறவேண்டியதைத்தவிர வேறுவழியில்லை. எனவே காந்தியின் ஏமாற்று கூட்டுத்தொகுதியில் நாம் சிக்காது நமது நிலைமையை நாமே கவனித்துக் கொள்ளவேண்டும். எனவே இத்தீர்மானங்கள் மிக இன்றியமையாதவென்று கூறி நாங்கள் இதை முழுமனதுடன் ஆதரிக்கிறோம் என்று பேசினார்கள். பின் தலைவர் முடிவுரைகூற கூட்டம் 8-30-க்கு முடிந்தது. திரு பாலகுருசிவம் எல்லாருக்கும் நன்றிகூறி, வரும் 18-10-31 ஞாயிற்றுக்கிழமை கனம் எம். சி. ராஜா எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் (மகாநாடு) நடைபெறுமென்று கூறிமுடித்தார்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

யிருப்பதுடனின்றி, ஒடுக்கப் பட்ட மக்களின் நிலைமையை பிரத்தியேகமாகவே கவனிக்கப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தி யிருக்கின்றார்கள்.

காந்திஜீயின் கொள்கையை அனுசரித்தும், அவருடைய நிலைமையை ஆதரித்தும் கணக்கற்ற தந்திகள் காந்திஜீக்கு ஒருசமயம் அனுப்பப்பட்டிருக்கலாம். தந்திகளை அனுப்புவதென்பதே விரும்பப் படக்கூடிய வித்தையாக யில்லா விட்ட போதிலுங்கூட, அது ஒரு விதமான வித்தையும், அறிவும், தந்திரமுமே தான் ஆகும். சாரதாவின் திட்டங்கள் சட்டமாக்கப்பட்ட பொழுது அச்செய்தியைக் கண்டித்து இந்திய சர்க்காருக்கு இம்மாதிரியான தந்திகள் கணக்கு வழக்கற்று அனுப்பட்டது யாருக்குத் தான் தெரியவராது? அத்தகைய தந்திகளால் அறிவிக்கப் பட்டவைகள் இன்னது தானெனவும், அவைகள் தேசமக்களின் மனக்கருத்தையும், உணர்ச்சியையும் மாறுகவும், தப்பிதமாகவும், பொய்யாகவுமேதான் அத்தந்திகளின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததென்பதும் யாருக்குத்தான் தெரியவராது? ஆனால், இதனால் காந்திஜீ அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் தந்திகளையும் உண்மையானவைகள் அல்ல என நாம் கூறவிரும்பவில்லை. சில அப்படியுமிருக்கலாம். ஆனால், அவைகள் யாவும், தேர்தல் முறைகளைப் பற்றிய விஷயத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் உண்மையான அபிப்பிராயங்களை வெளியிட்டுக்கூற வில்லை யென்பதுதான் நம்முடைய கருத்தும், உத்தேசமுமாகும். தனித்தேர்தல் தொகுதியானது, தற்கால நிலைமையில் அவர்களுக்கு மிக்க இன்றியமையாததாகும். இந்த அரசியல் உபாயமானது தற்காலிகமாகவும், வெளிப்படையாகவும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதை அவர்களே அறிந்து, நாளாவட்டத்தில் அவர்களே தங்களுக்கு இம்முறையவசியமில்லை யென்பதாக அறிந்து அதைவிட்டு விடவும் கூடும். தங்களுடைய சமூக மக்களின் பலத்தையும், எண்ணிக்கையின் அளவையும் அவர்களே அறிந்து, அரசியல் சூதாடுமேடையில் தங்களுடைய அதிர்ஷ்டத்தை அறிந்து கொள்ளும்படியான தைரியமும் அவர்களுக்கு ஒருக்கால் ஏற்படவும் கூடும்; மேலும், பிறருடைய உதவியென்பது கொஞ்சமுமின்றி, தங்களுடைய கால்களைத் தாங்களே தரையில் ஊன்றி குட்டிக்கரணம் போடக்கூடிய வல்லமையும், சாமர்த்தியமும் தங்களுக்கு வந்துவிட்டதென்பதை அவர்களே அறிந்து, செயற்கைக்கால்களையும், ஊன்றுகோல்களையும் அதாவது தனித்தேர்தல் தொகுதியை ஒழித்துவிடவும் கூடும். அத்தகைய சந்தர்ப்பம் நமக்கு நேரிடுமெனவேதான் நாம் கருதுகின்றோம். ஆனால், எப்பொழுது? என்று? அம்மாதிரியான சந்தர்ப்பம் நமக்கு நேர்ந்து, நம்முடைய நிலைமை உயருகின்றதோ, அப்பொழுதுதான், அன்றுதான் இந்தியாவின் அரசியல் துறையில் அது ஒரு பெரிய திருநாளாகவும், ஓர் முக்கியமான தினமாகவும் கருதப்படக்கூடும். ஏனெனில், ஒடுக்கப்பட்ட சமூகத்தினர்களாகிய தங்களுடைய சகோதரர்களுக்கு அப்பொழுதுதான் ஹிந்துக்களென்பவர்கள் உதவியளிக்க முன்வந்திருப்பதாக பேசப்படும்; அப்பொழுதுதான் ஹிந்து சமூகத்திலுள்ள இரண்டு வித வகுப்பினருக்குள்ளும் ஒருவருக்குள் ஒருவர் நம்பிக்கையும், நேசித பண்பையான ஒற்றுமையும் ஐக்கியமும் கொண்டிருப்பதாக பேசப்படும்.

காந்திஜியைப் போன்ற பெரிய தேசியத்தலைவர்கள் இத்தகைய காரியத்தில் ஈடுபட்டு எவ்வளவு செவ்வனே வுசிச்சிரத்தில் அந்த நோக்கொண்டேற முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவருவதே அவர்களுடைய முக்கியக் கடமையாக விருக்கவேண்டும். காந்திஜீயானவர் தன்னுடைய உயிர்போகும் வரையிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை எதிர்த்துப்போராடி தகர்த்தெறிவதாகக்கூறியிருக்கின்றார். அவர் தம்முடைய முழுபலத்தையும், சாமர்த்தியத்தையும் கொண்டு ஏழைகளிடத்திலும், கோழைகளிடத்திலும், வலிமையற்றவர்களிடத்திலும் போட்டிபோடுவதாகவே தான் நாம் கருதுகின்றோம்.

விளம்பரம்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

O. S. No. 216 of 1931.

கஸ்பா திருப்பூரிலிருக்கும் எம். சேக்சுலேமான் சாயபு மகன் டி. எஸ். காடந்தர் சாயபு—வாதி.

இப்போது பொள்ளாச்சி தாலூகா மீனாட்சிபுரத்திலிருக்கும் பாப்பு ஆச்சாரி மகன் கருப்புச்சாமி ஆசாரி—பிரதிவாதி.

இதன் மூலியமாய் தெரியப் படுத்துவதாவது:—

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதி பேரில் மேடோவர் பிராம்சரி நோட்டுப்படி அசல் வட்டி உள்பட ரூ. 139-8-0 ம் கோர்ட்டு செலவும் கிடைக்கவேணுமாய் தாவா செய்த அது கடைசியாக வாய்தா 31-10-31 தேதி போட்டிருக்கிறது. அன்றைய தினம் ஷை நெம்பரில் ஆக்ஷேபணையிருந்தால் தெரிவித்துக்கொள்ளவும். தவறினால் ஒரு கட்சியாய் தீர்மானம் செய்துவிடுவார்கள் என்கின்ற விஷயம் அறியவும்.

G. ஏசுரத்தினம் B. A., B. L.,
வாதி வக்கீல்.

திருப்பூர், 4-10-31.

தாழ்த்தப்பட்டார் முக்கிய மகாநாடு.

18-10-31 ஞாயிறு மாலை 4 மணிக்கு சென்னை எழும்பூர் எரிமைதானத்தில் இம்மகாநாடு கூடும். அதுகாலை, ராவ்பகதூர் எம். சி. ராஜா, எம். எல். ஏ., அவர்கள் அக்ராசனம் வகிப்பார்கள்.

"வட்டமேஜை மகாநாடும், நமது தற்கால நிலைமையும்" என்பதை அனுசரித்து, பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறும். தாழ்த்தப்பட்டார் அனைவரும் திரள் திரளாக எழுந்தருளுமாறு வேண்டப்படுகிறது. சொற்பொழிவாளர், எஸ். பி. ஐ. பாலகுருசிவம், ஜே. சிவசண்முகம்பிள்ளை, பி. ஏ., பி. செல்வநாதன். அ. பொன்னம்பலம்.

நன்கொடை

தொம்பக்குளம் சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் மேற்படி சங்க முக்கியஸ்தர் திரு. எ. தெய்வநாயகம் அவர்களால் நடத்திவைக்கப்பட்ட திருமணத்தை முன்னிட்டு நமது 'குடி அரசு'க்கு ரூ. எட்டு அனுப்பப்பட்டதை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். ப-ர்.

கண்ணப்பர் இலவச வாசகசாலை நன்றிபாராட்டல்.

சுயமரியாதை இயக்கத் தலைவரும், 'குடி அரசு' பத்திராதிபரும், ஏழை ஆதி திராவிட மக்களுக்கு பாடுபடுபவருமாகிய திருவாளர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஒரு வாரமாக உடம்பு அசௌக்கியத்தின் பேரில் சென்னை இராயபுரம் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி பிராட் பீஸ்ட்வார்ட் 10 நம்பர் கட்டிலில் தங்கி இருக்கிறார்.

அவரை 11-10-31 தேதி ஞாயிறு மாலை 5 மணிக்குமேல் மேற்படி வாசகசாலைத் தலைவரும், உதவித்தலைவர்களும், காரியதரிசிகளும், பொக்கிஷதாரரும், அங்கத்தினர்கள் அனைவரும் பார்த்து இரண்டொருவில் குணப்படும்படி ஆசைப்பட்டு விடைபெற்றார்கள்.

விளம்பரம்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு

S. C. No. 402. of 31.

பாவதீன் சாயபு—வாதி.

பல்லடம் தாலூகா திருப்பூர் அவனாசிரோட்டில் இருக்கும் முகமதிய ஜாதி வியாபார ஜீவனம் கூத்து பாம்பு மம்மாசாக்கா மகன் அசனார் சாக்கா—பிரதிவாதி.

உம்மால் புரோநோட்டின்படி தொகை கிடைக்கவேணுமாய் உமக்கு விரோதமாய் வாதி என்பவர் வியாஜ்யம் தொடர்ந்திருக்கிறபடியால் ஷை தாவாவுக்கு மறுமொழி சொல்லும் பொருட்டு 1931-௵ அக்டோபர்-௴ 26-௳ காலை 10 மணிக்கு நீர் இந்தக் கோர்ட்டில் நேரிலே ஹாஜராகும்படி அல்லது ஒரு பிளீடருக்கு சங்கதிகளைத் தெரிவித்து ஷை வியாஜ்யத்தைப்பற்றிய சகல கேள்விகளுக்கும் மறுமொழி சொல்லக்கூடிய யாதொரு நபரை அவரோடு சேர்த்தோ, அந்த பிளீடரை ஆஜர்படுத்தும்படி உமக்கு இதனால் சம்மன் பிரப்பிக்கப் பட்டிருக்கிறது. முன்னே சொல்லியுள்ள தினத்தில் நீர் ஆஜராகத் தவறினால் உம்மை ஒரு தலை பக்ஷமாக தீர்மானித்து தீர்ப்பு செய்யப்படும் என்பதை இதனால் உமக்கு தெரிவிக்கலாகிறது.

(Sd) M. K. Govindarajulu
Chettiar,
Advocate, for Plaintiff.

விளம்பரம்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

O. S. No 142 of 31.

பத்மநாப செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூகா திருப்பூரில் இருக்கும் கொல்லத்துவேலை ஜாதி தகப்பன் பெயர் தெரியாது T. R. சின்னசாமி போயன்.........1ம் பிரதிவாதி.

நீரும், ராமசாமி போயனும் வாதியிடத்தில் பற்று வரவு செய்துவந்த வகையில் உமக்கு விரோதமாய் வாதி என்பவர் வியாஜ்யம் தொடர்ந்திருக்கிறபடியால் ஷை தாவாவுக்கு மறுமொழி சொல்லும் பொருட்டு 1931-௵ அக்டோபர்-௴ 21-௳ பகல் 10 மணிக்கு நீர் இந்தக் கோர்ட்டில் நேரிலே ஆஜராகும்படி அல்லது ஒரு பிளீடருக்கு சங்கதிகளைத் தெரிவித்து ஷை வியாஜ்யத்தைப் பற்றிய சகல கேள்விகளுக்கும் மறுமொழி சொல்லக்கூடிய யாதொரு நபரை அவரோடு சேர்த்தோ அந்த பிளீடரை ஆஜர்படுத்தும்படி உமக்கு இதனால் சம்மன் பிரப்பிக்கப்பட்டிருக்கிறது. முன்னே சொல்லியுள்ள தினத்தில் நீர் ஆஜராகத் தவறினால் உம்மை ஒரு தலைபக்ஷமாக தீர்மானித்து, தீர்ப்பு செய்யப்படும் என்பதை இதனால் உமக்கு தெரிவிக்கலாகிறது.

(Sd) M. K. Govindarajulu
Chettiar,
Advocate, for Plaintiff

நாகை முதலாவது
சுயமரியாதை மகாநாடு.

தலைவர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் முடிவுரை.

———)O(———

3, 4-10-31-ல் தேதிகளில், நாகை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் தலைமை வகித்த திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் அவர்களின் முடிவுரை.

சகோதரிகளே! சகோதரர்களே !!

மகாநாடானது இதனுடன் முடிவு பெறும். எனது உள்ளக் கிடக்கையைச் சுருக்கமான வார்த்தைகளால் கூற விரும்புகிறேன். இந்நாகையில் எனது நண்பரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான காலஞ்சென்ற திரு பக்கிரிசாமிப்பிள்ளை அவர்கள் உயிருடனிருக்கும் பொழுது இவ்வூரில் நடந்த நாடார் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க வந்திருந்தேன். அவ்வமயம் அன்னார் எனக்குச்செய்த உதவியும், சட்டசபையில் என்னைப் போன்ற வாலிபர்களுக்கு உற்சாகமளித்து ஆதரவு காட்டியதும் என்றும் மறக்கமுடியாதனவாகும். அத்தகைய பெரியார் வாழ்ந்த இந்த நாகையில் இம்மகாநாடு கூடியது மகிழ்ச்சிதரத்தக்கதாகும்.

ஏமாற்றுங் குணமும், சூழ்ச்சி எண்ணமும நிறைந்தவர்களால் தேசத்தின் காரியங்கள் நடத்தப்படுகின்றன, அவைகட்குச் சிலபத்திரிகைகளாலும், தலைவர்களாலும் ஆதரவளிக்கப்படுகிறது. எதிரிகளால் கேட்கப்படும் கேள்விகளை வெளிக்குத்தெரியாமல் மறைத்துவிடுகின்றனர். அவர்களுடைய புரட்டுகளைப பொது ஜனங்கட்கு எடுத்துக்கூறி எல்லா மக்களும் நல்வாழ்வு வாழவே சுயமரியாதை இயக்கம 5 6, வருடங்களாகப் பாடுபட்டு வருகிறதென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது.

நேற்று தேசபக்த சமாஜத்தார் அளித்த வரவேற்புப் பத்திரத்தில், தீர்மானங்களைச்சரியாக நடத்திக்காட்டவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தீர்மானங்கள் சரியாக நடந்து வருகின்றனவென்றே கூறுவேன். தீர்மானப்படி செய்யாமலிருப்பது சுயமரியாதைச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யாததே யாகும். தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் சிமலாவிலிருக்கிறார்கள். அவர்கள் வந்தவுடன் கமிட்டி கூட்டம் நடைபெறும. அதன பின்னர் காரியாதிகள் ஒழுங்குபெறுமென்று கூற விரும்புகிறேன். ஈரோடு மகாநாட்டில் நியமிக்கப்பட்ட சத்தியாக்கிரகக் கமிட்டியைப்பற்றிச் சில கூற விரும்புகிறேன். சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும் விஷயத்தில் சில இடைஞ்சல்கள் ஏற்பட்டன. கமிட்டிக் காரியதரிசி தமதுபதவியைஇராஜிநாமாக் கொடுத்துவிட்டார். அதன் பின்னர் சத்தியாக்கிரகத்தைக் குறித்து ஆலோசனை செய்தோம. சத்தியாக்கிரகம் அவசியமில்லையென்று அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டோம.

சிலகாலமாகச் சுயமரியாதைத்தலைவர்கட்கும் தொண்டர்களுக்கும் அபிப்பிராய பேதமிருந்து வருவதாகக் கூறப்படுகிறது. சுயமரியாதை இயக்கத்தில் தலைவரென்றும் தொண்டரென்றும் பேதமில்லை. பிறப்பினால் பேதமில்லையென்றும், உயர்வு தாழ்வு இல்லையென்றும் கூறும் சுயமரியாதை இயக்கத்தில் எவ்விதம் தலைவர், தொண்டர் என்ற பேதங்கள் இருக்கமுடியும்? சுயநலம் காரணமாக—சொந்தப்பிரயோஜனம் காரணமாகக் கட்சியைப் பற்றித் திரித்துக்கூறிப் பிரசாரம் செய்பவர்களைப் பற்றி நமக்குக்கவலையில்லை. நமது கட்சியில் உண்மையாக நின்றுழைத்து நமது கட்சியினாலேயே மனிதனாகி நம் கட்சியின கொள்கைகளையே இன்னும் மனத்தில் வைத்துக்கொண்டு சுயநலம் காரணமாக—மனிதனுக்கு மனிதன் தனிமையிலுள்ள குரோதம் காரணமாக நமது கட்சிக்கொள்கைகளை வெளியில் எதிர்த்துக்கொண்டிருக்கின்றனர். இம்மாதிரி உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவோர்களைத் தாட்சண்யமின்றி நமது கட்சியை விட்டு விலக்கவேண்டியது தான்.

காலையில் இங்கு தீர்மானிக்கப்பட்ட முதல் தீர்மானம் விருதுநகர் மகாநாட்டுத் தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கிறதென்பதாகும். விருதுநகர் மகாநாட்டுத் தீர்மானங்களை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். அன்பர் பொன்னம்பலம் அவர்கள் அதைப் பற்றி நன்கு விளக்கிக் கூறினார்கள். அதில் முக்கியமானது சங்கத்தை ரிஜிஸ்தர் செய்யவேண்டுமென்பதும் மதங்கள் ஒழிய வேண்டுமென்பதுமே யாகும். அப்பால் மறியல் பகிஷ்காரம் ஆகியவற்றைப்பற்றி நீண்ட விவாதத்திற்கிடையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தைப் பற்றி நமது தலைவர் அவர்கள் நன்கு உங்களுக்கு விளக்கிக்கூறினார்கள். அடுத்தபடியாக இயந்திரங்களை ஆதரிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நான் விவசாயி என்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் வேலைகள் இயந்திர மூலமாக நடைபெறுகின்றன. உதாரணமாக, 10 ஏக்ரா தோட்டத்தில் கரும்பு பயிர் செய்யவேண்டுமானால் குறைந்தது 5 ஜோடி மாடுகளாவது வேண்டும். கால்வாய், குளம் முதலியவற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர சிரமப்படவேண்டும். பின்னர் கரும்பைச் சர்க்கரையாகவோ, வெல்லமாகவே செய்யவேண்டுமானால் குறைந்தது இரண்டு மாதங்கள் பிடிக்கும். ஆனால் இயந்திரத்தின் மூலம் அந்த வேலைகளைச் செய்தால் அதே காலத்தில் 100 ஏக்கர் பயிர்செய்துவிடலாம். இயந்திரத்தின் பயனாக 150 ரூபாய் செலவாகும். அத்தத் தொழிலில் தற்காலமிருக்கும் விலைப்படியே 600ரூபாய் வருமானம் கிடைக்கிறதென்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இயந்திரத்தின் அவசியத்தைப்பற்றி தலைவர்களும் நண்பர் அழகர்சாமி அவர்களும் நன்கு விளக்கிக்கூறினார்கள்.

ஆதிதிராவிடர்கள் பள்ளிக் கூடத்திற்கு நிலம் வேண்டுமென்பதாக ஒரு தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இவ்வூர் சப்கலெக்டரிடம் அதைப்பற்றிக் கூறும்படியும், அதனால் பரிகாரம் கிடைக்காவிட்டால் லேபர் கமிஷனரைப் பார்த்து ஏற்பாடு செய்யலாமென்றும் சொன்னேன். ஆதிதிராவிடர்களுக்கும் கஷ்டம் மிக அதிகமாகும் இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டாக சிலகாலம் இருந்ததின் மூலம் அவர்களின் கஷ்டத்தை அதிகம் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. தாலூகா போர்டு முதலியவற்றிற்குச் சொந்தமான பள்ளிக்கூடங்களில் ஆதிதிராவிடர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சட்டமிருக்கிறது. ஆனால் தாலூகா போர்டுக்குச் சொந்தமான பள்ளிக் கூடங்களில் அனுமதிப்பதில்லை. அதன் பின்னர் அவர்களுக்கு ஒரு சுற்றுத்தரவு அனுப்பினேன். எனினும் "ஒரு குழந்தைகளும் படிக்க வரமாட்டேனென்கிறார்கள்" என்று பொய்க்காரணம் கட்டிவிடுகின்றனர். இம்மாதிரிப் பொய்க்காரணம் காட்டிய ஒரு ஹெட்மாஸ்டரை வேலையினின்றும் விலக்கினேன். இராஜபாளையம் செல்லும் மோட்டார் பஸ்ஸில் ஆதிதிராவிடர்களை ஏற்றப்படமாட்டாதென்று டிக்கட்டில் அச்சிடப்பட்டிருந்தது. அதை எனது கவனத்துக்குக்கொண்டு வந்தனர். அம்மாதிரி ஜாதிவித்தியாசம் பாராட்டும் கார்களின் லைசென்ஸைக் கான்சல் செய்யவேண்டு மென்று உத்திரவிட்டேன். அதன்பின்னர் அத்தொல்லை ஒழிந்தது. தேவகோட்டை டிவிஷனில் அவர்கட்கு ஏற்பட்ட கஷ்டங்களைக்குறித்து நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். அது சம்பந்தமாக சென்னை சட்டசபையிலும் பிரஸ்தாபிக்கும்படி நேரிட்டது. அதனை விசாரிக்க ஒரு கமிட்டி நியமிப்பதென சட்டசபை முடிவுசெய்தது. இதுவரை இது சம்பந்தமாக ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. சட்டசபையில் ஆதிதிராவிடர்களைக்குறித்துச் செய்யப்பட்ட தீர்மானம் மிக அவசியமானதென்று கூறப்படவேண்டியதில்லை. 'புதுவை முரசு' வட்டமேஜை மகாநாட்டில் காந்தியின் பேச்சு, ஆகியவற்றைக்குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இன்றியமையாதனவாகும். இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு நாகையப்பதிவாசிகளுக்கும், நாகை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன்.

பின்னர் வரவேற்புக்கழகத்தலைவர் திரு. குப்புசாமி அவர்களாலும், திரு. டி. பி. ஆறுமுகம் அவர்களாலும் வந்தனம்கூறப்பெற்று, தலைவருக்கும், சொற்பொழிவாளர்கட்கும் மாலைகள் சூட்டப்பெற்றன. இத்துடன் மகாநாடு 6 மணிக்குஇனிதுமுடிவுபெற்றது

———

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது இருப்பது போலவே வியாபாரமும், குடியும் இருந்துதான்வரும். சரீரத்தால் தொழில் செய்கிற மிருகங்களைப்போன்ற உழைப்பாளிகட்கு கள்ளு அவசியமானது. நானே வாங்கிக் கொடுத்திருக்கிறேன்' என்று திரு காந்தியே சொல்லியிருக்கிறார். இதிலிருந்து சட்டங்களின்மூலம் கூட மதுபானத்தை நிறுத்திவிடமுடியாது என்பதே அவரது அபிப்பிராயமாகும். இப்படியிருக்க இந்த மறியல் என்பது நாடகம் என்றும், பாமர மக்களை ஏய்ப்பதின் மூலம் தாங்கள் தலைவர்களாகவும், தேசபக்தர்களாகவும் ஆவதற்கு செய்யப்படும் சூழ்ச்சி என்பதல்லாமல் வேறு என்னவித உண்மையோ, நாணயமோ இந்த மறியலில் இருக்கின்றதா? என்று யோசித்துப் பாருங்கள். இப்பொழுது அநேக ஊர்களில் கள்ளு குத்தகைக்காரர்களுடன் வியாபாரம் பேசிக்கொண்டு, மறியலை நிறுத்திக்கொண்டார்கள். சிலர்பலாத்காரத்திற்கு பயந்துகொண்டு நிறுத்திவிட்டார்கள். சிலர் பொதுஜனங்களிடம் வாங்கிய பணத்தை பங்கு போடுவதில் சண்டை போட்டுக்கொண்டு நிறுத்திவிட்டார்கள். சிலர் தேர்தலில் ஓட்டு பெறக்கூலி கொடுத்து நடத்துவதால், எதிர் அபேக்ஷகர்கள் உண்மையை வெளிப்படுத்துவதால் நிறுத்தப்பட்டு விட்டது. இந்நிலைமையில் 'மறியல், மறியல்,' என்று ஏன் இளம் வாலிபர்களை அயோக்கியர்களாகவும்வாழ்க்கைக்குஉதவாதவர்களுமாகவும் ஆக்கவேண்டும்? என்று

கேட்கின்றேன். தவிரவும் இந்து மதக் கடவுள்களில் சிலவற்றிற்கு குடம் குடமாய் கள் வைத்துப் படைத்து குடிப்பவர்களை எப்படி நிறுத்தி விட முடியும்? தவிர வட்ட மேஜை மகாநாடு திரு. காந்தி இஷ்டப்படி முடிவு பெற்று விட்டால் மறியல் நடக்குமா? என்று யோசித்துப் பாருங்கள். அப்பொழுது இவர்கள் என்ன சொல்லுவார்கள்? "சர்க்காரோடு ராஜி ஏற்பட்டு விட்டது. ஆதலால் மறியல் வேண்டாம். மறியலால் மதுநின்று விடாது. ஒன்றே சட்டத்தாலோ அல்லது வேறு உபாயத்தாலோ நிறுத்தலாம்" என்று தானே சொல்லுவார்கள். மற்றும் சமூக சம்பந்தமான குறைகளைப் பற்றிப் பேசி காங்கிரசுக்காரர் ஏன் அவ்விஷயத்திற்குப் பொது ஜனங்களிடம் வசூலிக்கும் 10 லக்ஷக்கணக்கான பணத்தில் ஒரு காசும் செலவு செய்வதில்லை என்றும், ஒரு வேலையும் காங்கிரஸ் தொண்டர்கள் வேலை திட்டத்தில் இல்லை என்றும் கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லுகின்றார்கள் என்பதை கவனியுங்கள்.

"அதெல்லாம் சுயராஜ்யம் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றும் "ஒருவரியில் சரிப்படுத்தி விடலாம்" என்றும் சொல்லுகின்றார்கள். அப்பேர்ப்பட்ட சமூக சம்பந்தமான பழக்க வழக்கங்களை சுயராஜியம் வந்த பிறகு ஒரு வரியில் சரிப்படுத்தி விடுவதானால், அது சாத்தியமானால்-உண்மையானால் கள்ளு குடியை நிறுத்த மாத்திரம் தானா பல வரிகளாலும் முடியாமல் போய் விடும்? என்று கேட்கின்றேன்.

தவிரவும் தீர்மானமானது யாரையும் குடிக்கும்படி சொல்லவில்லை. கள்ளுக்கடைக்கு குடிகாரர்களை கூட்டிக் கொண்டு போகும்படியும் சொல்லவில்லை. மறியல் மறியல் என்று சொல்லிக் கொண்டு செய்யும் முட்டாள் தனமான காரியத்தால் கள்ளு வியாபாரிகளை கொள்ளையடிக்கும்படியாகவும், தெருக்களிலெல்லாம் கள்ளு சாராயம் விற்கும்படியாகவும், பாமர ஜனங்கள் இந்த முட்டாள் தனமும் சூட்சி நிரம்பியதுமான வார்த்தைகளை நம்பி பொறுத்தமும், நாணயமும் யோக்கியப் பொறுப்பும் அற்ற சுயநலமிகளை ஜனப் பிரதிநிதியாக்க விடாமலும் செய்ய வேண்டுமென்பது தான் இத்தீர்மானத்தின் தத்துவமாகும். நமது மக்கள் பாமர மக்களானதினாலும், 100க்கு 90 பேர் எழுத்து வாசனை அறியாத மக்களானதினாலும், அவர்களை மூட நம்பிக்கையிலும், பகுத்தறிவற்ற தன்மையிலும் பார்ப்பனர்களும், அரசாங்கத்தாரும் வைத்திருக்கின்றார்களானதினாலும், காந்தி, காங்கிரஸ், கதர், பகிஷ்காரம், தேசியம், மறியல் முதலிய காரியங்களால் ஏமாந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இத்தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கின்றதே தவிர வேறில்லை என்று சொல்லுகின்றேன். நமது வாலிபர்களிடமிருக்கும் அபிமானமே என்னை இப்படிச் சொல்லச் செய்கின்றது. எழுச்சியான--வேடிக்கையான பரபரப்பை உண்டாக்கத் தக்க எதுவானாலும் இளம் வாலிபர்களின் மனதைக் கவர்வது இயற்கை. புரட்டாசி மாதம் வந்தால் அனேக வாலிபர்கள் நாமம் போட்டு, பஜனைக்குப் போய் விடுவார்கள். அல்லா பண்டிகை வந்தால் அனேக வாலிபர்கள் தங்களைமிருகமாக்கி, புலி வேஷம் போட்டுக் கொள்ளுவார்கள். வேடிக்கைப் பார்த்தஒன்று மறியா சிறு குழந்தைகளும் பண்டிகை நின்று ஒரு மாதம் வரை இவர்களைப் போல் ஆடிக் கொண்டே இருப்பார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் தங்கள் அறிவைக் கொண்டு யோசித்துப் பார்த்து சரியென்று தோன்றியபடி நடவுங்கள் என்று பேசினர்.

இதன் பிறகு ஓட் எடுத்ததில் எதிர்ப்பை ஆமோதித்தவரும் அனுகூலமாகவே ஓட் கொடுத்தார்.

தீர்மானத்தை எதிர்த்து திரு. சிவஞானம் என்பவர் பேசுகையில் தனிப்பட்ட ஒரு நபரைத் தாக்கப்போகிறார் என அவரது சில வார்த்தைகளால் தெரிந்தது. ஆதனால் அது ஆக்ஷேபிக்கப்பட்டு க்குறிப்பிட்ட மறியல் விஷயம் சம்பந்தப்பட்ட மட்டிலும் பேசும்படி தலைவரால் சொல்லப்பட்டார். திரு. சிவஞானம் சுயமரியாதைக்காரர் கள்ளுக்கடை மறியலை நடத்தினாலும் தானும் சேர்ந்து நடத்த விருப்பமே என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார். அவருடைய பேச்சு முடிந்ததும் திரு.எஸ். பி. கிருஷ்ணசாமி பதில் கூறினர்.

பிறகு சொந்திரபாண்டியன் அவர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாய் இருப்பவர்களைக் கை தூக்கச்சொல்லிக்கேட்கவே, விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் தவிர பெரும்பாலோரான ஜனங்களால் ஆதரவாய்க் கை தூக்கியதால் தீர்மானம் பெரும்பான்மையான வோட்டுகளால் நிறைவேறியது.

(3) புதுச்சேரி "புதுவை முரசு" பத்திரிகையில் கிறிஸ்துவ மத சம்பந்தமான ஆராய்ச்சி விஷயங்கள் வெளியானமைக்காகத் தகுந்த சமாதானம் கூறாமல் அதன் பேரில் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக்கொண்ட பாதிரிகளின் செய்கையை இம்மகாநாடு கண்டிக்கிறது.

பிரேரேபித்தவர்:—
திருவாரூர் கேசவலு.
ஆமோதித்தவர்:—
திருச்சி விஸ்வநாதம்.

4. இந்தியப் பொருளாதார அபிவிருத்தியைக் கோரி இந்தியப்பொருள்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய தவசியமென்றும், இயந்திர சாதன முறைகளாலும், கூட்டுத்தொழில் விமரிசையாலும் இந்நாட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்தும், தொழில் இன்மையைத் தடுத்தும், நம் நாட்டுச் செல்வம் அந்நிய நாட்டுக்குப் போய் விடாதபடியும் செய்யவேண்டும். கூட்டுத்தொழில் முறைகளை ஆதரிப்பதில் தொழிலாளர்கட்குச் சாதாரணமாய் ஏற்படக்கூடிய சுகாதாரக் குறைவு, முதலாளிகள் கொடுமை முதலிய குறைகளையெல்லாம் தக்க சீர்திருத்தங்களால் நிவர்த்திசெய்து, தொழிலாளர்களுக்குள் பலமான ஒற்றுமை உண்டாக்கவேண்டுமென்பதோடு, அவர்களுடைய அறிவு விர்த்திக்கும், நல்வாழ்க்கைக்கும் தக்க சௌகரியங்களும் ஏற்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்:—
சிவஞானம்.
ஆமோதித்தவர்:—
எஸ். வி. லிங்கம்.

(5) நாகை தாலூகா கூத்தூர் வைக்கம் வீரர் இலவசவாசகசாலையானது ஆதிதிராவிட வகுப்பினர்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் உழைத்து வருகிறது. ஆதலால் அதற்குக் கட்டிடம் அமைக்க 67 நெ. கூத்தூர் வட்டத்தின் ரீசர்வே 31ல் 5 புஞ்சை தருசும் பூமி சொரூபத்தில் பாழுங்குட்டையாயும் அவ்வூர் சுகாதாரத்திற்குக்கெடுதலாகவும் இருந்து வருகிற சுமார் 8 செண்டு ஸ்தலத்தை வாசகசாலைக்கு அடமானம் செய்து கொடுக்கும்படி இம்மகாநாடு கவர்ன்மெண்டாரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபித்தவர்:—
எஸ். பி. கிருஷ்ணசாமி.
ஆமோதித்தவர்:—
முத்துக்கிருஷ்ணன்.

(6) மனித சமூகத்தின் சரீரப்பிரயாசையைக் குறைப்பதற்காகவும், கொஞ்ச நேரத்தில் அதிகமான காரியங்களைச் செய்வதற்காகவும், குறைந்த பிரயாசையில் அதிக ஆதாயம் ஏற்படுவதற்கும் எதிராக இருக்கின்ற ஒரு கைத்தொழில் என்னும் தனித்தனி மனிதன் தொழில் முறையைக் கண்டிப்பதோடு, இயந்திர முறையை இம்மகாநாடு ஆதரிக்கின்றது.

பிரேரேபித்தவர்:—
கே. வி. அழகர்சாமி.
ஆமோதித்தவர்:—
ஈ. வெ. இராமசாமி.

12-30 மணிக்கு போஜனத்திற்காக மகாநாடு கலைந்தது. மீண்டும் 4 மணிக்கு மகாநாடு கூடியது. குரூப்போட்டோ எடுக்கப்பட்டது.

(7) வட்டமேஜை மகாநாட்டில் திரு. காந்தி அவர்களும், மாளவியா அவர்களும் முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டு தீண்டப்படாதவருக்கு மாத்திரம் தனிப் பிரதிநிதித்துவம் கூடாதென்று ஆட்சேபித்ததை இம்மகாநாடு கண்டிக்கிறது.

பிரேரேபித்தவர்:- துரைசாமி,
ஆமோதித்தவர்:- வி. பி. ஜி. கேசா.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

வாழு பெண்களைக்கொல்லாமல் கொல்லுவதைவிட அது நன்றல்லவா?

உலகில் ஜனசமூக உற்பத்தி பெண்களில்லாமல் ஆண்களாலும் ஆண்களில்லாமல் பெண்களாலும் நடைபெறுவது முடியாது. சமூகத்தின் ஒரு சிறந்த பாதியாகிய பெண்ணினம் அறியாமையால் பீடிக்கப்பட்டு அல்லற்படுமாயின், அத்தகைய சமூகம் எவ்வாறு முன்னேற்றமடையக் கூடும்? ஆண், பெண் குடும்ப வாழ்க்கை இரட்டை மாட்டு வண்டியையொத்தது என்பதை நம் அவதீசர்கள் அறிந்திருந்தும் பெண்களை இழிவு படுத்துவதேன்?

(5ம் பக்கத்தொடர்ச்சி)

லவே கடவுளைப்பற்றியும் அவர்களிடம் சொல்கிறார்கள். பச்சிளம் பிராயத்திலிருந்தே இயந்திரம் மாதிரி இரண்டு கைகளையும் தாங்களாகவே சேர்க்கும்படி சொல்லிக்கொடுக்கிறார்கள். அப்படிச்சொல்லிக்கொடுக்கும் வளர்ப்புத் தாய்களுக்கே கடவுளைப்பற்றி அக்குழந்தைகளுக்குத் தெரிந்ததை விட ஏதாவது விபரமாய்த் தெரியுமா?

(தொடரும்.)

மதமும் பகுத்தறிவும்.

1. மதப்பற்றுடையோர்க்கு ஓர்வார்த்தை

(நாகை கே. முருகேசன்)

சுயமரியாதைக் காரர்கள் முடிவாக என்ன சொல்லுகிறார்களென்பதை ஜனசமூகம் அறிவதற்குப் பிரயத்தனப்படுவதில்லை. எந்த மனிதனும் தன்னுடைய பகுத்தறிவைக் கொண்டு ஒவ்வோர் விஷயத்தையும் ஆராய்ந்து நிச்சயிக்கவேண்டுமென்றுதான் அது கூறுகிறது. பழைய பழக்க வழக்க சம்பிரதாயங்களுக்கு நம் மனத்தை அடிமைப்படுத்திக்கொண்டு சென்றோமானால் மனவளர்ச்சி எப்படி ஏற்படும்? நம்முடைய கஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணமாயிருப்பது என்னவென்பதை ஒவ்வொரு மனிதனும் தனி சுயபுத்தி கொண்டே நிச்சயிக்கவேண்டும். இம்மாதிரி சொல்லும்பொழுது "எல்லோரும் பகுத்தறிவுதான் உபயோகப்படுத்துகிறார்கள். அப்படிச்செய்யவில்லையென்று சுயமரியாதைக்காரன் சொல்லுவது பொருந்துமா?" என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் கேட்பதிலும் அர்த்தமில்லாமலில்லை. நீங்கள் சில சமயம் சில விஷயங்களில் உங்கள் பகுத்தறிவைத்தான் உபயோகிக்கின்றீர்கள். உங்களுடைய வியாபாரத்தைப்பற்றியோ, குடும்ப விஷயங்களைப்பற்றியோ, நீங்கள் சாப்பிடும் ஆகாரத்தைப்பற்றியோ அல்லது நீங்கள் பார்க்கும் நாடகங்களைப்பற்றியோ, கேளிக்கூத்துகளைப்பற்றியோ எவ்வளவோதான் யோசிக்கிறீர்கள். ஆனால் அதே பகுத்தறிவை நீங்கள் உங்கள் மதசம்பிரதாயத்திலும் அது சம்பந்தமான உங்கள் ஆச்சார அனுஷ்டானங்களிலும் எப்பொழுதாவது உபயோகித்ததுண்டா? இப்படிச்சொன்னவுடனே நீங்கள் சுயமரியாதைக் காரன்மேல் சந்தேகங்கொள்ள ஆரம்பித்துவிடுகிறீர்கள். "மதத்திலே கையைவைக்க வந்துவிட்டா"னென்று ஓலமிடுகிறீர்கள். அது ஏனோ? உங்கள் உலகவாழ்க்கையில் மற்றெல்லா விஷயங்களைவிட மதசம்பிரதாயங்களையே பிரமாதமாக கருதுகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் லட்சியமே அதுவாக இருக்கின்றதென்று ஆர்ப்பரிக்கின்றீர்கள். அப்படி இருந்தும் அதைப்பற்றி அதிகம் யோசிக்கமாட்டேனென்று அழுத்தமாகக் கூறுவது பகுத்தறிவா? அல்லது அது அற்ற தன்மையா? என்று யோசித்துப்பாருங்கள். உலகத்தில் மதக்கோட்பாடுகளுக்கோ குறைவில்லை. அதிலும் அவ்விஷயங்களில் உங்களை மிஞ்சுவதற்கு உலகத்தில் வேறெந்த ஜனசமூகமும் இல்லை. ஆனால் நீங்கள் ஒருவிதத்தில் சமாதானம் சொல்லிவிடுகிறீர்கள், அதாவது "பாரம்பரியமாக எங்கள் முன்னோர்களெல்லாம் அனுஷ்டித்து வந்ததையெல்லாம் நாமும் அனுஷ்டித்திடுவோம்; இதைப்பற்றி நாம் ஏன் சந்தேகம் கொளல் வேண்டும்; நம் முன்னோர்களைவிடவா நாம் அறிவாளிகள்? ஏதோ கடவுள் ஒருவர் உண்டு. அவருக்குப் பயந்து நடந்துகொண்டோமானால் நமக்கு எல்லா விதத்திலும் அருள் சுரப்பார். அதற்குமேல் ஏன் மதத்தைப்பற்றி மண்டையை உடைத்துக்கொளல் வேண்டு"மென்று அலட்சியமாகக் கூறிவிடுகிறார்கள். அப்படிச்சொல்வதோடு விட்டுவிட்டால் சுயமரியாதைக்காரனும் அதைப்பற்றி அதிகக் கவலைப்படமாட்டான். ஆனால் நடைமுறையில் உங்கள் மதசம்பிரதாயங்களின் பேரால் நிலைபெற்று நிற்கும் அலங்கோலம் எவ்வளவென்பதை யோசித்துப்பாருங்கள்.

கடவுள் என ஒரு வஸ்து இருப்பதாகவும், அது இந்த உலகத்தையும், உங்கள் குடும்பங்களையும் காப்பாற்றிக்கொண்டு வருவதாகவும் அதற்காக ஏராளமான செலவில் பிரமாண்டமான கோவில்களும், பணியணிபாதிகளும், தேர் என்றும் வாகனமென்றும், தூபதீபங்களென்றும், ஆராதனை அபிஷேகங்களென்றும், புரோகிதர்களென்றும், தாசிகளென்றும், பள்ளி அறைகளென்றும் எவ்வளவு அலங்கோலம்! இன்னும் உயர்ந்த சாதியென்றும், தாழ்ந்தசாதியென்றும், பார்ப்பானென்றும், பறையனென்றும், பட்டை நாமமென்றும், வட்டை நாமமென்றும், குழைச்சும் குங்குமப்பொட்டும் எவ்வளவு! அதனால் ஏற்படும் சச்சரவுகளும், மண்டை உடைப்புகளும், விபசாரமும், வீண் செலவுகளும், கிரிமினல் கேசுகளும், எவ்வளவென்று பாருங்கள்! இவ்வளவு ஆர்பாட்டங்களுக்கும் அயோக்கியத்தனங்களுக்கும், அஸ்திவாரமாக நிற்பது உங்கள் மதமும், உங்கள் கடவுள் நம்பிக்கையும் காரணமா? அல்லது வேறா? இவ்வளவு விவகாரத்திடையே நீங்கள் அலட்சியம் பாராட்டுவதாகக் கூறிக்கொண்டால் யார் நம்பமுடியும்? நீங்கள் சொன்னாலும் உங்கள் மதக்குருக்களும், புராணப்பண்டிதர்களும், மகந்துகளும், மடாதிபதிகளும், ஒப்புக்கொள்ளுவார்களா? சாதி இறுமாப்பாலும், சுயநலத்தாலும் ஏற்பட்ட வருணாச்சிரமம் உங்கள் கடவுளின் உத்திரவின்மேல் நடைபெறுகிறதென்று உங்களுக்கு உபதேசிக்கப்படவில்லையா?

அதை நம்பாது நீங்கள் எப்படி ஒரு மதவாதியாக இருக்கமுடியும்? கடவுளிடத்தில் மாத்திரம் 'நான் நம்பிக்கை உடையவனாய் இருக்கிறேன், மற்ற விஷயங்களைப் பற்றி எனக்கு அக்கரை இல்லை' என்று சொல்வதானால் 'கொழைக் கட்டைக்கும் அதற்குள் இருக்கும் பூர்ணத்திற்கும் சம்பந்தமில்லை'யென்று வாதாடுவதை ஒக்குமேயொழிய வேறொன்றல்ல. ஆகவே உங்கள் மதத்திற்கு முதன்மையாய் நிற்பது கடவுள் நம்பிக்கையும், அதற்கு அங்கமாய் நிற்பது சடங்கு சமஸ்காரங்களோடு நிற்பதுடன், அதை "நம்புகிறவனுக்கு சுவர்க்கம் நம்பாதவனுக்கு ஏழேழு ஜன்மத்திற்கு இழிநரகமும் வாய்க்கு"மென்று சொல்லப்படுகிறதல்லவா? இப்பொழுது யோசித்துப்பாருங்கள். நீங்கள் கடவுளைப்பற்றியும், மதங்களைப்பற்றியும், மதசம்பிரதாயங்களைப் பற்றியும், நீங்கள் இதுவரையில் அலட்சியம் செய்ததுபோல் இனியும் அலட்சியம் பாராட்டுவதற்கு இயலாது போய்விடும்.

தற்சமயம் சனசமூகத்தினிடையே சங்கடங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் காரணபூதமாய் நிற்பது உங்கள் கடவுள் நம்பிக்கையும், மதசாஸ்திர சடங்கு சம்பிரதாயங்களுந்தான் காரணமென்று சுயமரியாதைக்காரர்கள் கூறுகிறார்கள். ஆகவே உலகம் க்ஷேமம் அடையவேண்டுமானால் மக்களிடையேப் பதிந்துகிடக்கும் மத நம்பிக்கையை அடியோடு தகர்த்தெறியவேண்டுவது அத்தியாவசியமாகின்றது. கடவுளைப்பற்றி கவலைக்கொள்ளத் தேவையில்லை என்றாவது, அல்லது அந்தக் கடவுளுடைய யோக்கியதையைப்பற்றியாவது நாம் பகுத்தறிவைக்கொண்டு யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். நீங்கள் இது விஷயமாக ஆலோசிக்கப் பிரயத்தனப்படுங்கள். மனதிற்கு வேலை கொடுங்கள். உங்கள் பகுத்தறிவைக் கட்டிப் பிணிக்கும் எவ்வித பந்தங்களையும் அறுத்துத்தள்ளுங்கள். சிறிது நேரமாவது நீங்கள் எவ்வித மதசம்பிரதாயங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் கட்டுப்படாதவர்களாக நடுநிலைமையில் நின்று யோசியுங்கள்; அல்லது பாரபட்சமற்ற மனதோடாவது சிறிது நேரமாவது இருந்து நான் கூறுவதை சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் பகுத்தறிவை வைத்து ஆலோசித்த பிறகும் சுயமரியாதைக்காரனுடைய அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட முடிவுக்கு வருவீர்களாயினும், அதைப்பற்றி சுயமரியாதைக்காரர்களாகிய எங்களுக்குக் கவலை இல்லை. உங்களுக்கு எப்படியாவது சுதந்திரத்தோடு எண்ணவேண்டிய விருப்பம் ஏற்படவேண்டுமென்பதே எமது கோரிக்கை. ஆகவே நாம் இதுகாறும் கூறி வந்ததிலிருந்து நீங்கள் மற்ற விஷயங்களில் உங்கள் பகுத்தறிவை உபயோகிப்பதுபோலவே, மதத்தைப் பற்றியும் ஆலோசிக்கவேண்டியது அவசியமென்பதை உணர்ந்துகொண்டதாகக் கருதிக்கொண்டு, அந்த மதத்தைப்பற்றியே சிறிது ஆலோசிக்கலாம்.

மதத்திற்கு கடவுள் நம்பிக்கையானது பொதுவெனினும் அதனுடைய சொரூபமானது ஒவ்வொரு ஜனசமூகத்தின் மனோநிலைமையின் பக்குவத்திற்குத்தகுதியானவிதத்தில் கற்பனை செய்யப்பட்டு விளம்பரம் செய்யப்படுகிறது. அதைப்பற்றி நாம் பின்னால் யோசித்துக்கொள்ளலாம். மற்றபடி மதத்தை இரண்டு முக்கிய பிரிவுகளாகப்பிரிக்கலாம். ஒன்று சடங்கு, சம்பிரதாயம் ஐதீகமாகவும் இருக்கிறது. மற்றொன்று மனதில் ஏற்படும் ஒருவித எழிர்ச்சியை திருப்திபடுத்துவதற்கான ஒரு லட்சியம் என்றுதான் சொல்லவேண்டும். சில சமயங்களில் இந்த இரண்டுவித பாகுபாடுகளும் ஒரு மனிதரிடத்தில் ஏககாலத்திலும் இருப்பதுண்டு. எனினும் நடைமுறையில் நோக்குவோமாயின் ஒன்றையொன்று பகைத்து நிற்கிறதென்றே அறியவேண்டி இருக்கிறது. எந்த மதவாதி கேவலம் சடங்கு சம்பிரதாய வைதீகங்களையேப் பிரமாதப்படுத்துகிறானோ, அவன் மனோஎழிர்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்களுககு அன்னியனாய்விடுகிறான். அதுபோலவே எவனொருவன் கேவலம் மனோ எழிர்ச்சி சாந்தியே தனக்குப் பிரதானமென்று கருதுகிறானோ, அவன் கட்டாயம், சடங்கு சம்பிரதாயங்களுக்குக்கட்டுப்படுவதில்லை. அதைக்கேட்டமாத்திரத்திலேயே அவன் வெருக்க முற்பட்டுவிடுகிறான். என்றாலும் இவ்விரண்டுவிதமான போக்கில் உள்ளவர்களும் இவ்வுலகத்திற்கு அவசியமான மானுஷீகதர்மத்தை முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். நியாயம், உண்மை, தயவுதாட்சண்யம், நடுநிலைமை என்பது இவர்கள் உள்ளத்தில் எள்ளளவுகூட இருப்பதில்லை. ஒரு விதத்தில் காரணம் கூறவேண்டுமானால் தற்சமயம் இந்தியாவில் வழங்கும் மதசமூகப்பற்றுடைய ஜனசமூகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இவர்கள் மதசம்பிரதாயங்களையும், மற்றவைகளையும்பிரமாதமாகஎண்ணிவாழ்க்கையை நிர்ணயிக்க முயல்கின்றார்களேயொழிய நியாயம்,சத்தியங்களுக்கு ஒரு சிறிதும் மதிப்புக்கொடுப்பதில்லை. இம்மாதிரி இவர்கள் நாளடைவில் பழகி வருவதாலேயே இவர்கள் உள்ளத்தில் ஒருவிதமான அலட்சியமும், மமதையும் ஏற்படுகிறது. மனதிற்கும் வளர்ச்சி மார்க்கமில்லாமல் செக்கு மாட்டிற்குள்ள மனோபான்மையை அடைந்துவிடுகிறார்கள். ஐதீகமானது ஒரு காலத்தில் ஒரு சிறிது உண்மைகொண்டதாக இருந்திருக்கலாம். அது நாளடைவில் அந்த சிறிய உண்மையும் மறைந்து, வெறும் ஐதீகமென்பதற்காகவே போற்றி, புகழப்பட்டு வருகிறது. மனதானது செக்கு மாட்டு நிலைமையில் அதிகம் எண்ணுவதற்கிடமில்லாமல் தனக்குத் தற்செயலாய் ஏற்பட்ட இந்த மதமெனும் நம்பிக்கையின் கட்டுப்பாட்டுக்குள்ளாகவே சோம்புற்றிருப்பதேஇன்பமாகக்

கும்பகோணத்தில் ஈ. வெ. இராமசாமி.

3000 பேர்கள் கூட்டம்.

நாகை சுயமரியாதை மகாநாட்டுக்குச் சென்றிருந்த திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி அ. பொன்னம்பலம், எஸ். வி. லிங்கம், சி. நடராஜன், எஸ். ஆர். கண்ணம்மாள், சித்தக்காடு இராமய்யா, விசாலாக்ஷி, சுப்பையா. செல்லப்பா. சுலோசனா. முதலியவர்கள் கும்பகோணம் சுயமரியாதை வாலிப சங்கத்தாரால் அழைக்கப்பட்டார்கள். கும்பகோணம் திரு குப்புசாமி (சிவகாமி சிதம்பரனார் அவர்கள் தகப்பனார்) அவர்கள் வீட்டில் பகலில் பலமான விருந்து நடந்தது. மாலை 5 மணிக்கு காங்கேயன் காந்தி பார்க்கில் ஒரு மீட்டிங் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு சுமார் 3000 பேர்களுக்கு மேலாகவே ஜனங்கள் வந்திருந்தார்கள்.

விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்:-

திருவாளர்கள் ஆர். சி. வெங்கட்டராமன், கருப்பண்ணசாமி, முருகையன் நீலமேகன், நடராஜன், குப்புசாமி, சுப்பிரமணியம், வரதராஜன், ஈ. வெ. இராமசாமி, சி. நடராஜன், கே. இராமய்யா, எஸ். வி. லிங்கம், என். பி. காளியப்பன், செல்லப்பா, இராமசாமி ராம. மு.ராம.சுப்பையா, பொன்னம்பலம், கண்டனூர் முத்தையா, இரங்கநாதன், முசிரி கந்தசாமி, ஈரோடு கண்ணம்மாள், சுப விசாலாக்ஷி சுலோசனா ஆகியவர்களும், மற்றும் சாக்கோட்டை, வலங்கிமான், நாச்சியார் கோவில், மாயவரம், திருவாரூர், தஞ்சை முதலியவிடங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு கும்பகோணம் பிரபல சுருட்டு வியாபாரியும், சுயமரியாதை வாலிப சங்க உபதலைவருமான திரு நீலமேகம் அவர்களை தலைமைவகித்தார்கள். திரு நீலமேகம் அவர்கள் தலைமை உரையாக பேசும் போது திரு இராமசாமி இந்த ஊரில் பேசி இரண்டு வருஷமாகிறதென்றும் இப்பொழுது அவர் வந்த சமயத்தில் இயக்கத்தினைப்பற்றிய விஷயங்களை யார் வேண்டுமானாலும் கேட்டு, தெரிந்து கொள்ளலாம் என்றும் சொன்னார். பிறகு திரு இராமசாமிக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு இராமசாமி எழுந்து பெருத்த ஆரவாரத்தில்பேசத்துடங்கி சுமார் $3\frac{1}{2}$ மணி நேரம் பேசினார். அதாவது சுமார் 2 மணி நேரம் சுயமரியாதை கொள்கைகளைப் பற்றி பேசிவிட்டு, இந்த ஊர ஜனங்களுக்கு இபோது சொல்லவேண்டிய அளவுக்கு சொல்லி இருப்பதாகவும், மற்ற விஷயங்கள் கேள்விகளைப்பொறுத்து அவற்றின்மீது சொல்லுவதாகவும் சொன்னார் காகிதத்தில் எழுதப்பட்ட கேள்விகளாக பல கேள்விகள் வந்தன. அவற்றிற்கு பதில் சொல்லும் முறையில் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் பேசினார். பிறகு இரவு 9 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது. (விபரம் பின்னால் வெளிவரும்) பிறகு திரு ஆர். சி. வெங்கிட்டராம அவர்கள் வீட்டில் விருந்து நடந்தது. விடியற்காலம் 3 மணி வண்டியில் எல்லோரும் ஊருக்கு பிரயாணமானார்கள்.

கருதுகிறது. சுய எண்ணமும், சுய நிர்ணயமும் வெறுக்கபடுகிறது. மூடநம்பிக்கையானது செழித்தோங்குகிறது. அதனால் மதத்தின் பேரால் செய்யும் ஒவ்வொரு அக்கிரமும், அயோக்கியத்தனமும் மதக்கடமையாகவும், புண்ணிய கைங்கரியமாகவும் மதிக்கப்படுகிறது. இம்மாதிரியான மனோ நிலைமையானது நாகரீக வளர்ச்சிக்கோ, ஒழுக்கசீலத்திற்கோ, உலக மேம்பாட்டிற்கோ எவ்வளவாவது உபயோகப்படுமா? என்பதை நாம் யோசிக்கவேண்டும். உங்களுடைய வேத புராண இதிகாசங்களோ, புராணப் பண்டிதர்களோ இதைப் பற்றி என்ன சமாதானம் கூறினும் பிரயோசனம் என்ன?

(தொடரும்.)

[3ம் பக்கத்தொடர்ச்சி]

வதன் மூலம் மறுமுறை ஏற்படும் வியாபார நெருக்கடியானது ஏற்கனவே ஏற்பட்ட நெருக்கடியை விடதாகை முடியாத கஷ்டத்தை உண்டாக்குகின்றது எந்த ஆயுதத்தின் மூலம் முதலாளிகள் ஜமீன்தாரர்களை வீழ்த்தினார்களோ, அதே ஆயுதம் இப்பொழுது முதலாளிகளின் தலைக்கு மேலாக தொங்கிக் கொண்டிருக்கிறது. முதலாளிகள் தங்களை கொல்லுவதற்கு வேண்டிய ஆயுதத்தை மாத்திரம் உற்பத்தி செய்து கொண்டதோடு நிற்காமல், தங்களை ஒழிப்பதற்கு அந்த ஆயுதத்தையே உபயோகிக்கத் தக்க கூட்டத்தார்களையும் உற்பத்தி செய்து கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தார்கள் தான் தற்காலத்திய தொழிலாளர்கள் என்னும் (Proletarian) வேலையாளர்களாவார்கள்.

முதலாளிகள் அதாவது முதலாளிகளுடைய செல்வம் எந்த அளவுக்குப் பெருகுகின்றதோ, அந்த அளவுக்குத் தான வேலையாளர்களும் பெருகுகின்றார்கள். வேலையாளர்களுக்கு எந்த அளவுக்கு வேலை கிடைக்கின்றதோ, அந்த அளவுக்கு அவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

முதலாளிகளுடைய முதல் எந்த அளவுக்கு பெருகுகின்றதோ, அந்த அளவுக்குத் தான் வேலையாளர்களுக்கு வேலையும் பெருகுகின்றது. முதலாளி-வேலையாளர்களின் சம்பந்தமானது இந்தமுறையில் ஒன்றாக் கொன்று பிணைத்துக்கொண்டிருக்கின்றது.

ஆகையால் வேலையாளர்கள் சந்தையில் மற்ற சாமான்கள் விற்கப்படுகின்ற மாதிரியாக தங்களைத் தாங்களே விற்றுக் கொள்ளுகிறார்கள். மற்ற சாமான்களில் விலையும், கிராக்கியும் ஏற்றத் தாழ்வும் ஏற்படுவது போலவே, வேலையாளர்களுக்கும் கூலியும், கிராக்கி சவுகரியமும் ஏற்படுகின்றது.

மேலும், இயந்திரப் பெருக்கத்தின் காரணமாகவும் அந்தந்த வேலைக்குத் தக்குந்த மாதிரியாக பலவித இயந்திரங்கள் நூதனமாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதின் காரணமாகவும் வேலையாட்கள் தனக்கென்று எவ்வித தனி வேலைப் பழக்கமும், அனுபோகமும் வேண்டிய அவசியமில்லாதவர்களாகி விட்டார்கள். இயந்திரத்தின் மூலம் எந்த வேலையையும் மிகச் சுலுவாக யாரும் செய்து விடக்கூடிய சௌகரியம் ஏற்பட்டு விட்டதால் இயந்திரத்தில் வேலை செய்யும் வேலையாளர்களுக்கு அதிக யோக்கியதை ஒன்றும் தேவையில்லாததால் இடந்திர வேலைக்காரர்கள் இயந்திரத்தின் ஒருபாகமாகக் கருதப்பட வேண்டியவர்களாகிய அவ்வளவு சாதாரண நிலைமையுடையவர்களாகிவிட்டார்கள் ஆகையால் இயந்திரத்தின் ஒருபாகமான சாமானை வாங்குவதற்கு எவ்வளவு செலவழிக்கவேண்டுமோ, எவ்வளவு சுலப முயற்சியில் கிடைக்கக்கூடியதோ, அவ்வளவிலேயே வேலையாளர்களுடைய யோக்கியதையை நிர்ணயித்து, அவர்களுடைய தேவைகளையும் அதாவது அந்த வேலையாளின் ஆகாரத்திற்கும், அவன் பிள்ளை, குட்டிகளுடைய ஆகாரத்திற்கும் வேண்டிய அளவு மாத்திரம் கொடுக்கப்படவேண்டியவனானான்.

ஒரு சாமானின் மதிப்பானது அதை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவைப் பொறுத்திருப்பதால் மிஷின்களின் மூலம் வேலையாளர்களின் கஷ்டம் அதிகரித்து இருந்தாலும் சாமான் மதிப்புக்கு உண்டான விலையை அனுசரித்தே கூலி குறைக்கப்படுகின்றது. இதன் மூலம் வேலையாளரின் கஷ்டடம் ஒரு பக்கம் அதிகரிக்கவும், மற்றொரு பக்கம் அவனுடைய கூலி குறைந்துகொண்டு வரவும் ஏற்படுகின்றது. அதாவது இயந்திரங்களின் உபயோகம் எவ்வளவு அதிகப்படுகின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேலையாளர்களுக்கு வேலையில் சிரமமும், வேலை நேரம் அதிகரித்தும் வருகின்றது.

பார்ப்பனீயமே!

பாழடைக.

---

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்

200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இஞ்சின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இஞ்சின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலைன் மோட்டார்களிலும் 30 வருஷ அனுபவமுள்ள

ரா. காளியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் கோளாறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இதுவரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-

குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது ஐக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மநு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை		0—4—
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்பா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிச்சிக்கும் சுயவர்கள் யார்?	...	0—2—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்		0—8—0
* மாதர் சுதந்திரம்.	...	0-10-0
* ஆராய்ச்சி அணிகலம்		0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.
(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரவின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முரிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத்தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சுக்கவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல கிரந்தியும், பல சித்ரின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினலோ, அகால போஜனத்தினலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினலோ, தளர்செய்தக் கொண்டதினலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதற்கு சந்து கட்டு என்பதற்கும் தடையின் இரத்த நாம்பு வழியாக சென்ற முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக்கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0
விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—
திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களிபற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Bookstore,
122, Pitty street, penang

Serojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S

The Central stores
11, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்: —
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—1—0.

ஆசிரியர் (நாவலூற்ற)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

கெந்தக பஸ்பம்.

மேககுஷ்ட ரோகத்திற்கு 52 வருடங்களாக கையாண்டுவந்தது, ஏராளமான சர்ட்டிபிக்கேட்டும், தங்கமெடல்களும் பெற்றது.

இந்த கெந்தக பஸ்பம் மஹான் ராமலிங்க சுவாமியால் உபதேசிக்கப்பட்டது. மேக குஷ்டரோகம், 48 நாளில் சொஸ்தமாகிவிடும். அவுஷதம் மழைகாலத்திலும், வெய்யிற்காலத்திலும் சாப்பிடலாம், அவுஷதம் சாப்பிடும் காலத்தில் எத்தொழிலும் செய்யலாம். இந்த அவுஷதத்தால் குஷ்டரோகம் தீராவிட்டால் பிறகு கடவுள்தான் தீர்க்கவேணும். இந்த அவுஷதத்தால் வியாதி தீராதென்கிற சந்தேகப்பட்டவர்கள் எக்ரிமெண்டு செய்து கொண்டால் அவுஷதம் இனமாய் அனுப்பப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விபரம் எழுதி தெரிந்துகொள்ளவும்.

48 நாள் சாப்பிடக்கூடிய அனுபான லேகியம், பஸ்பம், தைலம். விலை. ரூபா. 20—0—0

அவுஷதத்திற்கு ஆர்டர் செய்பவர் ரோகத்தின் விபரம் கண்டு எழுதவும். ஏழை ஜனங்கள் நேரில் வந்தால் அவுஷதம் இனம்.

விலாசம்:—

ஆயுர்வேத வைத்திய பாஸ்கர
V. கலிவராயன்,
நிர்த்தன மங்கலம் போஸ்டு,
(வழி) சிக்கல், தஞ்சாவூர் ஜில்லா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்.

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிட்டப்பட்டு [illegible] வெளியிடப்பட்டது